271

271
4-51

ஸம்புடம் 10
ஸஞ்சிகை 10

ஸ்ரீ:

கர-ஸூ
ஐப்பசி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE REGISTRAR OF ...
28 OCT 1951
MADRAS

ஆராவமுதே! அடியேனுடலம் நின்பால் அன்பாயே*
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!*
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை*
ஏரார்கோலம் திகழக்கிடந்தாய்! கண்டேன்எம்மானே!.

விஷயஸூசிகை

விஷயம்		பக்கம்
1. ஸங்கல்பஸூர்யோதயம்	...	304
2. விதுராதிகரணதத்வம்	...	307
3. ப்ரமாணுநுகுண பாடம்	...	310
4. புயலும் பொறுமையும்	...	311
5. ஸத்யம் வத	...	315
6. ஸ்ரீ தேசிகனும் தமிழ்மறையும்	...	318
7. தம்பதீ தைவதம்	...	323
8. தேசிக தீபாவளி	...	327
9. பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	328
10. தேசிகன் ஜாதகம்	...	329
11. செய்திகள்	...	330
12. ஸம்பாதகரின் குறிப்புகள்	...	331
13. ஸதுபதேசம்	...	333

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ப்ரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதி சந்தாதாரர்களுக்குத் தபாலில் போடப்படுகிறது. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஸஞ்சிகை அனுப்பப்படுகிறதா என்று பார்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சில சந்தாதாரர்களிடமிருந்து ஸஞ்சிகை கிடைக்கவில்லை என்று கடிதங்கள் வருகின்றன. ப்ரதி இங்கிலீஷ் மாதம் 20-ம் தேதிக்குள் ஸஞ்சிகை கிடைக்காவிட்டால் உடனே சந்தாதாரர்கள் அந்த விஷயத்தைத் தெரிவித்தால் வேறு ஸஞ்சிகை அதற்கடுத்த மாத ஸஞ்சிகையுடன் அனுப்பப்படும். விலாஸ மாறுதல்களை உடனுக்குடன் தெரிவிக்காத காரணத்தால் ஸஞ்சிகைகிடைக்காவிடில் அதற்கு பதில் ஸஞ்சிகை அனுப்பப்படமாட்டாது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ௵ ஐப்பசி மீ { ஸஞ்சிகை 10

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத்கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்பவா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற 5 வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட் திருச்சீ.]

‘விஶ்வஜநவித்வம்ஸநம் க்ரீடிதம்’ இப் பெண்ணுக்கு என்ன விளையாட்டில் ப்ரிய மென்று கேட்பர். ஸகல பாபங்களையும் த்வம்ஸம் செய்வதே எனக்கு இன்பம் தரும் விளையாட்டு. ‘ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேऽர்ஜுந’ என்று பகவத்கீதை. ‘போயபிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசாகும்’ என்று பகவதீ கீதையான திருப்பாவை. பாபங்களைச் சொக்கப்பானை செய்வதே என் விளையாட்டு. ‘அஸந்தேஶாத்து ராமஸ்ய தபஸஶ்சாநுபாலநாத் | ந த்வாம் குர்மி தஶக்ரீவ! பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா’ என்று பிராட்டி கூறியதை நினைக்கலாம். கந்யாப்பெண்ணுயிருந்தால் பத்து கழுத்துக்களோடு பெரிய மரக்கட்டையான மஹாபாபியான உன்னுடைய உடலை சொக்கப்பானை செய்யலாம். என் நாயகன் சொல்லி அனுப்பவில்லை. என்னுடைய பாதிவ்ரத்ய தபஸூக்கும் ராமைகாதீநத்வத்திற்கும் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்தி நிஷ்டையான தபஸூக்கும் பொருந்தாது என்று கருத்து. ‘ஸோஹம் விஷ்ணுபக்தி:’ ஸோஹம் என்று ஜபிப்பர் உபாஸகரான பக்தர். அதற்கு ‘அவன் என்னாகி நின்றொழிந்தான்’ என்று சடகோபர் பொருளுரை. ‘விஷ்ணுபக்தியாகிய நான்’— அவர் ப்ரபாவத்தால் சக்தியளிக்கப்பெற்ற நான் என்று இங்கே பொருள். அப்பெரிய ஆச்ரயபலம் பெற்ற நான். வைகுண்டர் தாஸியாகிய நான். ‘ஸவ்யா ப்ராணிதி’ சலிக்காமல் அசங்காமல் கட்டைபோலிருப்பதால் மூச்சோடு உயிரோடு இருக்கிறேன். அசங்கினல் சலித்தால் எனக்கு மூச்சிராது என்று விரோதாஸம். நான் மூச்சோடு உயிரோடிருக்கிறேன் என்றால் யார் மூச்சுப்போய் முடிகிறார் என்று கேள்விவரும். ‘ஸம்ஸ்ருதிஶ்ச தே ஸம்ஸ்ருதி:’. ஸம்ஸாரம் முடிந்து தொலைகிறது. ஸம்ஸாரமிருந்தால் ஜீவன் ம்ருதப்ராயனே. ஸம்ஸாரம் தொலைந்தால்தான் ஜீவன் ஜீவனுடன் ஜீவிப்பது. ஸம்ஸ்ருதி என்னும் பேய் தொலைகிறது.

மேலும் உயர்வு தாழ்வுகளின் தத்வமறிந்த மஹர்ஷிகளும் பகவானும் பாடியுள்ள உண்மையைக் கூறுகிறேன்.

> நிருத்ய தரஸா ஶாஸ்த்ரசரணக்ஷுண்ணம்
> க்ஷுண்ணம் விவிச்ய விகணய்ய வா யதநி
> யாதநாஷ்டாங்கிகை: | க்ருத்வா நிஶ்சித்ய
> ஸ்திதிஶதாவிவா யஜ்யதே தயி ஸ்திரவ
> ஸ்திதா யதி கிமர்த்யதே ஸாத்யதே ||

மநோபலத்தால் இந்த்ரியங்களையும், ப்ராணவாயுவையும் அடக்கி ஒடுக்கி ஸுஷும்நா நாட்யாதாரமான குண்டலியெனும் நாடியையும் தேடியறிந்து 72000 நாடிகள் முதலியதை கணக்கிட்டு மூன்று வேதங்களிலும் கூறப்பட்டுள்ள தர்மங்களை யநுஷ்டித்தாலும் பக்தியெனும் என்னிடத்தில் த்ருடமாய் சலிக்காத நிஷ்டையில்லாவிடில் என்னதான் கைகூடும். பக்தியாகிய என்னிடம் நிஷ்டை இருந்துவிட்டால், ஸம்ஸார விலங்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டு மோக்ஷமடைவான் என்பதைச் சொல்லவும் வேணுமோ? அது ஸித்தம்தானே. மஹர்ஷிகள் வசநங்கள் என்று இங்கே கூறியதற்கு உதாஹரணமாக ‘ஶ்ரேய: ஸ்ருதிம் பக்திமுதஸ்ய தே விபோ’ என்ற ப்ரஹ்மஸ்துதி ச்லோகத்தை ப்ரபாவிலாஸ வ்யாக்யாநம் உதாஹரித்தது. ‘நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா | பக்த்யா த்வநந்யயா ஶக்ய:’ முதலிய கீதாச்லோகங்

கள் இது விஷயத்தில் வசநங்கள். இந்த அங்கத்தின் முடிவில் 'கிம் விஜ்ஞாபநை:' என்கிற ச்லோகத்தில் விவேகராஜர் இதையே கூறுகிறார். உபக்ரமம்போல உபஸம்ஹாரமும்.

விஷயப்பற்றுகளை ஒழித்து யோகத்தவம் புரிந்தாலும் என்னோடு (நிரதிசய ப்ரீதி பக்தியோடு) கூடியிருந்தால்தான் அது மோக்ஷஸித்தியையளிக்கும்.

இப்பொழுது—

முமுக்ஷோரேவ விசே முஷிததமோ
ஹஸ்ய முராரிஸ ஸமாதி ஸம்ரோஹந்நேவ
ஹரதி ஸர்வாகவிததிம் । வரஷ்டாதா
ஸ்யேயம் யதிஹ விசேஷாநிஷ்டஜநுஷா
ஸமாயுஷ்யம் தத்க்ஷம் வா ஸமஜநி விதக்ஷ்ய:
ப்ரமோத: ॥

மோக்ஷமடைய விரும்புகிறவன் ஐஹிகாமுஷ்மிக ஸுகபோகங்கள் அநித்யங்களென்று தீர்மானித்து அவற்றை வெறுத்து கர்மயோகம் ஜ்ஞானயோகம் முதலிய ஸாதகங்களிலிறங்குகிறான். ஜ்ஞானயோகமென்பது ஆத்மஸ்வரூப விஷயமான யோகாப்யாஸம். யோகஸூத்ரப்படிக்குள்ளயோகாப்யாஸம். பகவத்பக்தியெனும் ப்ரீதிரூபத்தோடு (இனிப்போடு) கூடியதல்ல. அது சுஷ்கயோகம். ஸ்நேஹப்பசையற்றது. 'ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே' என்பர். அந்த ஸ்நேஹத்தோடு கூடிய ப்ரீதி த்யாநத்தை இங்கே முராரி விஷயமான யோகஸமாதி என்கிறார். நமக்கு மோக்ஷேச்சை பிறந்துவிட்டால் உடனே பகவான் நம்முடைய புத்திமோஹம் தொலையும்படி செய்கிறார் என்பதை 'முமுக்ஷோரேவ விசே' என்று கூறியவுடனே 'முஷிததமோஹஸ்ய' என்று கூறுவதால் காட்டுகிறார். 'தமேவ முமுக்ஷோர்வ்யோஹாந்யோபோஷித:' என்ற ஸ்தோத்ரரத்நத்தை நினைக்கிறார். மோஹமெனும் களையைக் களையவே உடனே ஸமாதிப்பயிர் ஓங்கி வளருவதை உடனே 'ஸமாதி: ஸம்ரோஹந்' என்று கூறுவதால் விளக்குகிறார். களையெடுத்த ஸமாதி முளைகிளம்புகையில் முன் செய்த வினைக்களைகள் உடனே மாள்வதைக் கூறுகிறார். 'ஸம்ரோஹந்நேவ ஹரதி' என்பதற்கு முளை கிளம்புகையிலேயே வினைகளை மாளச்செய்கிறது என்று கருத்து. இன்பமான பக்தியோகம் ஹ்ருதயத்தில் குதிர்ந்து தொடங்கினபிறகு இனிப்பிறவி வேண்டேனென்று இருக்குமிவனுக்கும் இப் பிறவியில் மிகுதியுள்ள காலம் 'ஜநஸூவம் விஷூவ்' என்றபடி, கொள்ளமாளாவின்பவெள்ளம் கோதிலதாயிருப்பதால், இந்த இன்பவெள்ளமான பக்தியோகமெனும் ஸாதநமே ப்ராப்ய மோக்ஷபலம் போலவேயிருக்கிறது. ஆகையால் 'இது பேரின்பத்திற்கு ஸாதநமா? அல்லது இதுவே பரமப்ராப்யப் பேரின்பமா?' என்பதைப் பற்றி விசாரிப்பதும் தர்க்கிப்பதும் வீண் ச்ரமத்தைத் தருமேயொழிய அதிலொரு உறுதியாகத் தீர்மானிப்பதே கஷ்டம். நாமேன் இந்த வீண்ச்ரமப்படவேண்டும்? இப்பொழுது இருக்கிற பேரின்பத்தையநுபவித்துக்கொண்டேயிருப்போம். 'வாட்டாற்றான் வந்தின்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்' என்று திருவாய்மொழி கடைப்பத்தில் பாடியபடி அவனாக வலுவில் வீடுசேர்க்க விரைந்தால் அவன் திருவுள்ளம். 'ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே' என்பர் அர்ச்சைத் திருமேனி யநுபவரஸிகர். அர்ச்சையான தேஹத்தில் ஆத்மபுத்திசெய்பவர். 'பக்திஸ் ஸித்தேர்கரீயஸீ' என்று பாகவதம். 'முகுந்தன் முக்தியைக்கொடுத்து விடுவார். பக்தியைக்கொடார்' என்றும் பாகவதம். 'ஸைவ நந்தாவாப்தி' என்ற முன் ச்லோகத்தையுமிங்கே நினைக்கவேணும்.

இங்கே நாடக ஸந்திகளைந்தில் கடைசியான நிர்வஹணஸந்தி தொடங்கி இருக்கிறது. ஸூத்ரகாரர் கடைசி யத்யாயமாகிய பலாத்யாயத்தை பக்திஸ்வரூபத்தை சோதித்து நிர்ணயிக்கும் ஆவ்ருத்த்யதிகரணத்தோடு தொடங்கி த்யாநம் யோகஸாதநம் முதலியவைதையும் விசாரித்ததால் ஸாதநமும் பலம்போல இனிப்புடையதை ஸூசித்தாரென்று ஸாராவளியில் அந்த அத்யாயத்தின் முதல் ச்லோகத்திலேயே விளக்கப்பட்டது. ஸூத்ரக்ரந்தத்திலும் இந்த ஐந்து ஸந்திகளுண்டு. அங்

கும் நிர்வஹணஸந்தி பக்தியோக ஸ்வரூபவர்ண னத்தோடு தொடங்குகிறது. இது சாரீரக நாடகம். 30-ஆவ்ருத்திகள் சாரீரகச்ராவணம் செய்வித்தபிறகு ரசனை செய்த நாடகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ।'

என்று பலநிர்வஹண ஸந்திக்கு 14-அங்கங்கள்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥'

என்று நிர்வஹணஸந்தியின் லக்ஷணம் முன்பே உத்திஷ்டமானது கார்யம் என்னும் பலதசை. பலாவஸ்தையும் பலாகம: என்ற பயன் கைகூடும் பரிபூர்ண ஸித்தியும் சேர்வது நிர்வஹண ஸந்தி. முதலில் போட்ட விதை (பீஜாவாப:) விக்நங்கள் ஒழிந்து நன்றாய் முளை கிளம்பி இனி நிர்விக்நமாய் வளர்கிறது. இந்த நிர்வஹண ஸந்தியின் முதலங்கமான ஸந்தி என்பது முதலில் போட்ட விதை விக்நங்கள் நீங்கித் தடையில்லாமல் முளைவளருவதைக் காட்டுவது. பக்தியோகம் நிர்விக்நமாக இன்பவெள்ளமாய் ஊற்றெடுத்துப் பெருக ஆரம்பிப்பது ஸந்தி எனும் இந்த முதலங்கம். '[illegible]' என்று அதன் லக்ஷணம்.

(ஆலோசித்துவிட்டு) இப்பொழுது செய்ய வேண்டிய ஊழியமென்ன? (விஷ்ணுபக்திக்கு தாஸ்யவாஸனையும் கைங்கர்ய ரஸவாஸனையுமே நிரம்பியுள்ளது. '[illegible]' என்றே மநோரதம் சென்று கொண்டேயிருக்கிறது. அதுதான் பகவத் பக்தரின் ஸ்வரூபம்.)

[illegible]
[illegible] ।
[illegible]

[illegible] ॥

ஜீவனுடைய பாபங்கள்தான் அவனுக்கு சத்ருக்களை ஏற்படுத்துவது. இவனுடைய சரீரமும் இந்த்ரியங்களும், புத்ர புத்ரி களத்ராதிகளும் ஆத்மாவுக்கு சத்ருவர்க்கத்தில் சேர்ந்தவரே என்பதை '[illegible]' என்று குறிப்பது. அமித்ரர்களில் இவர்களும் ஓர் வகுப்பு. இவர்கள் ஆத்மாவுக்கு விலங்குகள். ஸம்ஸாரத்தில் அழுந்தச் செய்பவை. இவையெல்லாம் இவனை பிசாசக்ரஹத்தைப்போல் பிடித்துக்கொண்டு ஆசைகளாலும் சிந்தைகளாலும் ஆட்டிவைக்கின்றன. '[illegible]'-பிசாசுக்ரஹம் புகுந்து அதனால் பிடிபட்டு அதன் வசமாய் இருப்பவர்போல். '[illegible]' என்று முதலங்கத்தில் வர்ணித்ததை நினைக்கவேணும். இப்படிப் பல பிசாசங்களால் பிடிக்கப்பட்டு ஆட்டிவைக்கப்படுமவனை விஷ்ணுபக்தியாகிய நான் பகவானுடைய தயாநுக்ரஹத்தின் லீலையால் விடுவிக்கவேணும். க்ரஹம் பிடித்தவரை அநுக்ரஹித்தால்தான் விடுவிக்கலாமென்று ரஸம். இந்த பிசாச க்ரஹங்களைப் பின் தொடர்ந்து பகவத்தயையென்னும் க்ரஹம் புகுந்து அந்த க்ரஹங்களை விரட்டிவிட்டு பகவானை இவனுக்குள் ஆவேசிப்பித்து க்ரஹத்தைப்போல் பிடித்து அவர் வசமாக்கிக்கொள்ளும்படி செய்யவேணும். அந்த க்ரஹங்களுக்குப் பதிலாய் 'க்ருஷ்ணக்ரஹம்'. அஹங்க்ரஹ விசாரத்தில் முன்பே விஸ்தரித்துள்ளோம். '[illegible]' என்று ப்ரஹ்லாதர் விஷயத்தில் ரிஷி பாடினர். '[illegible]' என்றும் அந்வயித்து பக்தியாகிய என்னால் ஆவேசிக்கப்பட்டு முன் ஆவேசித்திருந்த புத்ராதி ஆசாக்ரஹங்களின் பிடியைத் தளர்த்தவேணும். விஷ்ணுபக்திக்ரஹம் (விஷ்ணுக்ரஹம்) மிகப்பெரிது மாபூதம். 'அநுக்ரஹ' என்பது பின்னால் பிடிப்பது என்பதையும் சொல்லும். '[illegible]'-முன் பிடித்த தேஹப்பற்று முதலிய ஆவேசங்களிலிருந்து விடுபட ஆசை இருப்பவன்.

(தொடரும்)

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

விதுராதிகரண தத்வம்

[ஸ்ரீ. உப. வித்வான். மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருவையாறு.]

சாரீரகத்தில் ஸாதநாத்யாயமெனப்படுகிற மூன்றுமத்யாயத்தின் நான்காவது பாதத்தில் ஒன்பதாவது அதிகரணம் 'விதுராதிகரணம்' என்பது. பார்யையை இழந்து புநர்விவாஹமோ அல்லது ஸந்யாஸமோ செய்துகொள்ள வியலாத ஆபத்தில் கிடக்கும் விதுரர்களும், இவர்களைப் போலவே ஆச்ரமதர்மங்களைப் பரிபூர்ணமாக அநுஷ்டிக்கமுடியாத ஸங்கடநிலையில் நிற்கும் மற்றுள்ளாரும், ப்ரஹ்மவித்யையை அநுஷ்டாநம் செய்யலாம் என்பது இவ்வதிகரணத்தில் ஸித்தாந்தமாகும்.

இங்கு ஸ்ரீபாஷ்யத்தில்—(1) ரைக்வர் (2) பீஷ்மர் (3) ஸம்வர்தர் முதலிய அநாச்ரமிகளிடமும் ப்ரஹ்மவித்யாநுஷ்டாநம் காண்கிறதே என்பதாக ஸ்ரீஸூக்தியொன்று அமைந்திருக்கின்றது.

இதன்பேரில் ஸந்தேஹமொன்று ஆனி ஆடி மாதத்து ஸஞ்சிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. அதாவது:—'ஸ்ரீபாரதத்தில் ஆதிபர்வத்திலும், ஆநுசாஸந பர்வத்திலுமுள்ள பீஷ்மோபாக்யாநங்களை நோக்குமிடத்து, பீஷ்மர் க்ருஹஸ்தர் என்றே தெளிவாகிறது. 'இனி ஸ்த்ரீ ஸங்கம் செய்வதில்லை' என்பதாக பீஷ்மர் ப்ரதிஜ்ஞை. இவர் அவஸாநகாலத்தில் அக்நித்ரயமும் இவரை அநுஸரித்துச்சென்றதாகவும்உள்ளது. இவற்றால் இவர் விவாஹம் செய்துகொண்டு அக்நிஹோத்ரம்முதலிய தர்மங்களை நடத்திவந்ததாகவும் ப்ரஜோத்பாதநம் செய்வதை மட்டில் விலக்கிக்கொண்டதாகவும் தேறுகிறது. இந்த ப்ரமாணங்களை அநுஸரித்தே மேற்படி பாதத்தில் நான்காவதாகிய அக்நீந்தநாத்யதிகரணத்திலே உபநிஷத்பாஷ்யகாரரும் பீஷ்மரை க்ருஹஸ்தாச்ரமி என்பதாகவே ஸ்தாபநம் செய்தருளியிருக்கிறார். தத்துவநிலை இவ்வாறாக விருக்கச்செய்தே முன் உதாஹரித்துள்ள ஸ்ரீபாஷ்யத்திலே பீஷ்மரை அநாச்ரமியாகக் கொண்டதும் இதை அநுஸரித்து அதன் அதிகரணஸாராவளியிலும், அதன் வ்யாக்யாநமாகிய சிந்தாமணியிலும் ஸ்ரீதேசிகனும், ஸ்ரீகுமாரவரதாசார்யரும், அநாச்ரமியாகவே பீஷ்மரைப் பட்டோலை செய்தருளியதும் எப்படி ஸங்கதமாகும்? என்று ஸ்ரீபாஷ்யாதி ஸ்ரீஸூக்திகளுக்கும் பாவப்ரகாசிகா க்ரந்தபங்திக்கும் பாதகமில்லாமல் ஸமாதாநத்தை விளக்கவேணும் என்கிற பிரார்த்தனையோடு அந்த ஸந்தேஹம் வெளியாகியிருக்கிறது.

இந்த ஸந்தேஹத்திற்குப் பரிஹாரமாகவே இவ்வதிகரணதத்வ வ்யாஸத்தை அடியேன் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். ப்ரஹ்மவித்யைக்கு அங்கபூதங்களான ஸ்வாச்ரமதர்மங்கள் யாவற்றையும் அநுஷ்டித்துவரும் நான்கு ஆச்ரமிகளுக்கும் வித்யாநுஷ்டாநத்தில் அதிகாரமுண்டு என்பது முன் அதிகரணங்களிலே தீர்மானிக்கப்பெற்றது. இந்த வதிகரணத்திலோவெனில், ப்ரஹ்மவித்யாநுஷ்டாநத்திற்கு வேண்டிய ஜ்ஞாநம், ஶக்தி, ஶாஸ்த்ராநுமத ஜாதி, குணதியோக்யதை, ஆகிய இவைகளிருந்தும் வித்யாங்கமான ஆச்ரமதர்மங்களைக்குறைவின்றி அநுஷ்டிக்க வியலாத ஸங்கட நிலையில் நிற்கும் அதிகாரி விசேஷங்களுக்கும் தங்கள் அதிகாரத்துக்கு ஏற்ற தர்மாநுஷ்டாநமாத்திரத்தினால் பக்தி செய்ய உரிமையுண்டு என்று ஸ்தாபநம் செய்யப்படுகிறது. அவர்களாகிறார்—(1) விதுரரும் (2) ஸமாவர்தநத்தோடு நின்று விவாஹம் செய்துகொள்ளாதவரும் (3) ஆச்ரமிகளில்ஸம்வர்தரைப் போன்ற ஆபத்தர்மநிஷ்டரும் (4) மைத்ரேயியைப் போன்ற ஸ்த்ரீகளும் என்றிவ்வாறான அதிகாரிகள். ஸ்த்ரீகளுக்கும் அதிகாரமுண்டு என்பதை 'ஸ்த்ரீயஶ்ஶூத்ராணாமபி ஜநகவத் ஸாக்ஷாஜ்ஞாநிக்ருதாநாம் ப்ரஹ்மவித்யாதிகாரோ

ஷ்ட்வ’ என்பதாக ந்யாயஸித்தாஞ்ஜநத்திலே ஸ்ரீதேசிகன் ஸமர்த்தநம்செய்தருளினர். மைத்ரேயிக்கு வித்யோபதேசம் செய்து யாஜ்ஞவல்க்யர் ஸந்யஸித்துக்கொண்டதாக ப்ருஹதாரண்யகத்தில் காண்கிறது. ‘வாசக்நவீ’ என்கிற கார்கீ முதலியவர்களுக்கும் ப்ரஹ்மவித்வமானது ச்ருதம் என்பதாக இவ்வதிகரணத்தில் ஸ்ரீசங்கர பாஷ்யமுள்ளது. ‘விதுராதீநாம் த்ருஷ்டத்வாச் ஸம்வர்த்தஹிதாநாஞ்’ என்று ஆபத்தர்மநிஷ்டருக்கும் இங்கு அதிகாரஸமர்த்தநம் செய்வதாக அத்வைதபாஷ்யத்தில் தெளிவாகின்றது.

ஸம்வர்த்தர்

ப்ரக்ருத ஸ்ரீபாஷ்யஸூக்தியில் பீஷ்மாசார்யரோடு ஒருகோர்வையாக முன்னும் பின்னும் ரைக்வரையும் ஸம்வர்த்தரையும் உதாஹரணம் செய்தருளுகிறார் ஸ்ரீபாஷ்யகாரர். இவர்களில் ஸம்வர்த்தர் என்பவர் க்ருஹஸ்தாச்ரமியென்பது ஸ்ரீமஹாபாரதத்திலே ஆச்வமேதிகபர்வாரம்பத்தில் விசதமாகக்காண்கிறது. அங்கிரஸ்ஸின் கநிஷ்டபுத்ரரிவர். ப்ருஹஸ்பதியின் ப்ராதா. மருத்தன் என்கிற க்ஷத்ரியனுக்கு யஜ்ஞத்தில் ரித்விக்காயிருந்து யாகத்தை பூர்த்திசெய்துவைத்திருப்பதாக அங்கு இவருடைய உபாக்யாநமுள்ளது.

‘ஸம்வர்த்தர் க்ருஹஸ்தாச்ரமஸ்தரன்றாகில் அரசன் இவரை யஜ்ஞத்திற்கு ரித்விக்காக்கியது எப்படி? ஆகவே இவர் ஆச்ரமநிஷ்டரே’ என்று ஸ்ரீதேசிகனும் ஸுஸ்பஷ்டமாகவே ஸ்தாபித்தருளினர். ‘க்ருஹீ கிவாஹாவே க்ஷயம் யாதாஸ்ய நைவாஸ்ய ஸம்வர்த்தஸ்ய ஹி ஹ்ருதா ஸ்வீக்ருதோ ந வரண:? க்ருஹஸ்தஸ்யைவ ஹி க்ருத்விஜ்யாதிகம்’ என்பதாக தேசிகன் ஸ்ரீஸூக்தி.

இவர் பரமஹம்ஸர் என்பதாக ஜாபாலோபநிஷத்திலுள்ளது. ‘தத்ர பரமஹம்ஸா நாம ஸம்வர்த்தகாருணி ... அவ்யக்தலிங்கா அவ்யக்தாசாரா அநுந்மத்தா உந்மத்தவதாசரந்த:’ என்றிவ்வாறாக அங்குள்ள உபநிஷத்வாக்யம். ஆகவே ஸம்வர்த்தரானவர் க்ருஹஸ்தர் அல்லது பரமஹம்ஸர் என்றோ, முதலில் க்ருஹஸ்தராய் பிறகு பரமஹம்ஸரானர் என்றோ கொள்ளவேண்டும். இரண்டு பிரகாரங்களாலும் இவர் ஆச்ரமியே என்று தேறுகிறது.

ரைக்வர்

ரைக்வர் என்பவர் ப்ரஹ்மசர்யாச்ரமநிஷ்டர் என்பதாகவே ஏற்படுகிறது. ஜாநச்ருதி என்கிற அரசன் ரைக்வருக்கு ஏராளமான தநங்களையும் விவாஹத்திற்காக கந்யகையையும் உபஹாரமாக்கி இவரிடம் ஸம்வர்க்கவித்யையை உபதேசம் பெறுகிறான். உபதேசிக்குமுன் ஜாநச்ருதியை ‘சூத்ர’ என்று கூப்பிட்டு உபதேசம் நடைபெறுகிறது. அதனால் இவன் த்ரைவர்ணிகரைச் சேர்ந்தவனன்று என்பதாக ஒரு ஆசங்கை கிளம்பியது. இதற்கு அபசூத்ராதிகரணத்தில் காட்டிய பரிஹாரங்களில் ‘உத்தரத்ர சைத்ரரதேந லிங்காத்’ என்னும் மூன்றாவது ஸூத்ரத்தினால் அடியிற்கண்ட பரிஹாரமொன்று சொல்லப்பட்டது. அதாவது—ஸம்வர்க்கவித்யையைப் பற்றியவரையில் ப்ராஹ்மணருக்கும் க்ஷத்ரியஜாதியைச் சேர்ந்தவனுக்குமாக ஸம்பந்தம் தெளிவாகிறது. அந்த ரீதியில் ப்ரக்ருதத்தில் உபதேசம் செய்பவரான ரைக்வர் என்பவர் ப்ராஹ்மணர் என்று ஏற்படுவதால் மற்றொருவனாகிய ஜாநச்ருதி என்பவன் க்ஷத்ரியனாகவே இருத்தல் வேண்டும் என்பதாக அவ்வதிகரண ஸூத்ரத்தில் நிர்ணயமுள்ளது. அதை அடியொற்றுமிடத்தில் அந்த வித்யையில் ப்ராஹ்மணர்களில் க்ருஹஸ்தருக்கும் ப்ரஹ்மசாரிக்குமே அந்வயம் தெளிவாவதால் கந்யாப்ரதாநத்தினால் ரைக்வர் க்ருஹஸ்தரன்று என்பதாகத் தேறுகின்றமையால் பரிசேஷந்யாயத்தினால் ப்ரஹ்மசர்யநிஷ்டர் (உபகுர்வாணர்) என நிர்ணயிக்கவேண்டிவருகிறது. இந்த யுக்தியைப் புறக்கணிக்கக்கூடிய ப்ரமாணம் யாதொன்றும் புலப்படவில்லை.

பீஷ்மர்

இனி ப்ரக்ருத பீஷ்மவிஷயத்தை நோக்குமிடத்து இவர் க்ருஹஸ்தாச்ரமி என்பதற்கு வேண்டிய ப்ரமாணங்களை ஸந்தேஹகர்த்தாவே

நிரூபித்திருக்கிறார். ஆனால் பீஷ்மபர்வத்தில் முன்னூறு அச்வமேதயாகங்களை பீஷ்மர் நடத்தியதாக ஸ்ரீக்ருஷ்ணபகவானுடைய திருவாக்கை உதாஹரித்திருக்கவேண்டியது மிகவும் முக்யமானது. அதாவது:—'ஸ்ரீபகவாந் — யஶஸா ஶௌர்யேண வ்ருதவாந் வஸுந்தராம் யோநேகஸாஹஸ்ராம் ஸிம்ஹ இவேக்ஷதே | ஸ ஏவ பீஷ்ம: குருவம்ஶகேது: யேநாஹ்ருதா: ஸ்த்ரிஶதம் வாஜிமேதா: ||' என்பதே. இப்படி ஆதிபர்வம், ஆநுஶாஸநபர்வம் பீஷ்மபர்வம் ஆகியவற்றில் பீஷ்மர் ஆஹிதாக்நி என்றும் பன்முறை அச்வமேத யாகங்கள் செய்தவர் என்றும் சிலாலிபியாய்க்காண்கிறது ஆதலால் பாவப்ரகாசிகையில் உபநிஷத்பாஷ்யகாரர் இவரை பிதாவுக்காக ப்ரதிஜ்ஞை செய்யுமுன் விவாஹம் செய்து கொண்டதாகப் பூர்வ மீமாம்ஸாந்யாயத்தைக் காட்டி ஸ்தாபநம் செய்தருளியதுதான் தத்வமான விஷயம். மீமாம்ஸை ஆறுவது அத்யாயத்தின் எட்டாவது பாதத்தில் ஷஷ்டி ந்யாயத்தைக்காண்க.

ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தி

இனி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியைப்பற்றிய அர்த்தவிமர்சநம் ப்ராப்தமாகிறது.

'ஆஶ்ரமேதரஹி ரைக்வபீஷ்மஸம்வர்த்தகாதீநாம்
அநாஶ்ரமிணாமபி ப்ரஹ்மவித்யாநிஷ்டத்வம்'

என்பதாக அந்த திவ்யஸூக்தி. இதில் 'ஆதி' என்கிற பதத்தினால் முன் உதாஹரித்துள்ள ஜாபாலச்ருதியில் ஸம்வர்த்தரோடு ஒரு கோர்வையாகப் பரிகணிதர்களான ஜடபரதர், நிதாகர் முதலியவர் விவக்ஷிதர் என்பது ச்ருதி, ஔசித்யம் முதலியதால் தேறுகிறது. இவர்களில் ஜடபரதர் ப்ரஹ்மசாரி. நிதாகர் என்பவர் க்ருஹஸ்தர். நிதாகருடைய வைச்வதேவாங்கத்தை இவர் ஆசார்யனாகிய ரிபு ஸ்வீகரித்ததாக ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலுள்ளது. ஜடபரதர் ப்ரஹ்மசாரி என்பது ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் ஸ்ரீபாகவதத்திலும் தெளிவானது. மைத்ரேயி முதலான ஸ்த்ரீகளும் இங்கு ஆதி ஶப்தத்தால் விவக்ஷிதராவர்.

ஆகவே இங்கு அநாச்ரமிஶப்தத்திற்கு அதிசயிதாச்ரம ஸம்பந்தமில்லாதவர் என்று பொருள் கொள்ளவேணும். ஆச்ரமஶப்தமானது ஆச்ரமஸ்வரூபபரமாகவும், ஆச்ரமதர்மபரமாகவும் இரண்டுவிதமாகவும் ஸ்ரீபாஷ்யாதிகளிலே பலவிடங்களில் காண்கிறது. 'அநுஷ்டேயம் பாதராயண: ஸாம்யஶ்ருதே:' என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் ஆச்ரமஶப்தமானது ஆச்ரமதர்மபரம் என்பதாக அங்கு ச்ருதப்ரகாசிகை. இங்கு ஆச்ரமஶப்தத்தின் மேலுள்ள ப்ரத்யயமானது அதிஶயமுள்ளவர் என்கிற அர்த்தத்திலுள்ளது. ஆச்ரமாஸாதாரண தர்மபூர்த்தியில்லாதவர் என்றபடி. பீஷ்மருக்கு ராஜ்யபரிபாலநமாகிய க்ஷத்ரியாஸாதாரண தர்மமும் தர்மப்ரஜார்த்தமான தாரஸங்க்ரஹணத்தில் ப்ரஜார்த்தமின்மையாகிற ஆச்ரமாஸாதாரணமும் இல்லையன்றோ? ஸம்வர்த்தரிடமும் அப்படியே.

'ஸோஹம் ப்ருஹஸ்பதிநைவ யாஜ்யைஶ்ச ஸர்வஶ: ஸுஹ்ருத்பிஶ்ச தேவதா: | ஶரீரமேகேந ஶோகஷ்டம் ஶரீரம் வர்ஜிதம் க்ருதம் ||' என்பதாக ஸம்வர்த்தர் தாமே மருத்தனிடம் தமது க்ருஹஸ்தாச்ரமக்குறைவை எடுத்துரைத்தார். க்ருஹஸ்தாச்ரமத்திற்கு அஸாதாரணமான அக்நிஹோத்ரயஜ்ஞாதி பரிகாரஸம்பத்தியானது ப்ருஹஸ்பதியினால் அபஹரிக்கப்பட்டு தன் உடல் ஒன்றே உபேக்ஷித்து விலக்கப்பட்டதாக ஸம்வர்த்தருடைய வார்த்தை. ஆதலால் இவர் ஆபத்தர்மநிஷ்டராய் ஆச்ரமியாயிருக்கச் செய்தே அக்நிஹோத்ராதிகளை இழந்து நிற்பவர் என்று தெளிவாகிறது.

இவ்வாறான ஆச்ரமதர்மக்குறைவுகளையிட்டு ஆச்ரமிகளையும் அநாச்ரமிகளாக வழங்குதலுண்டு. ஸ்ரீபாகவதத்தில் பரமஹம்ஸனை நிஷ்க்ரியன் என்றது. இவனுக்குப் பூர்வாச்ரமியைப்போல் கர்மா ப்ரசுரமாக இல்லையாதலால், அல்பதநமுள்ளவனை தரித்ரன் என்று வழங்குகிறாப்போலே நிஷ்க்ரியன் என்று நிர்தேசம் என்பதாக சததூஷணியில் ஆசார்யன் அருளுகிறார். சில விசேஷங்களில்லாமையால் 'நிர்விகல்பம்' என்ற சொல்லை ஸ்ரீபாஷ்யகாரரே நிர்வாஹம் செய்தார். ப்ரக்ருதத்திலோ ஆச்ரமஶப்தத்திற்கு மேலுள்ள அதிசயவாசியான ப்ரத்யயமுள்ளது. ஆதலால்

விதுராதிகளிடம் ஆச்ரமஸ்வரூபமே இல்லாமையாலும், ஆபத்தர்மநிஷ்டரான மற்றவர்களிடம் ஸ்வரூபேண ஆச்ரமஸம்பந்தமிருந்தும் ஆச்ரமாஸாதாரண தர்மபூர்த்தியில்லாமையாலும், இவ்விருவரும் ஆச்ரமாதிசயம்பெற்றவரன்று என்கிற நோக்கால் அநாச்ரமிகள் என்ற ஸ்ரீபாஷ்யஸூக்தியானது பொருந்தும். பீஷ்மரை ஆச்ரமி என்று ஸமர்த்தநம் செய்த உபநிஷத்பாஷ்யகாரர் தாமே விஷயவாக்யதீபிகையிலும் ப்ருஹதாரண்யகோபநிஷத்பாஷ்யத்திலும் பீஷ்மரை அநாச்ரமிசப்தத்தால் நிர்தேசம் செய்தருளினர். அதிசயிதமான ஆச்ரமாஸாதாரணதர்மஸம்பந்தம் பெறாதவர் என்பதாகவே அநாச்ரமி சப்தத்திற்கு ஆசார்யர்கள் கொண்டுள்ள அர்த்தமென்று தேறுகிறது.

உபஸம்ஹாரம்

பீஷ்மர் அபத்நீகர் என்றும், அபத்நீகரும் அக்நிஹோத்ராதிகளைச் செய்யலாமென்பதற்கு இவரே உதாஹரணமென்றும் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனைப்போல் ப்ரதிநிதியான பத்நியைக் கொண்டு அச்வமேதாதிகளைச் செய்யலாம் என்னும் பக்ஷமானது பூர்வமீமாம்ஸா ந்யாயத்திற்கும் சிஷ்டாநுஷ்டாநத்திற்கும் சேராது. ஸ்ரீசக்ரவர்த்திருமகன் நிலைவேறு.

ப்ரக்ருத ஸந்தேஹத்தில் அதிகரணஸாராவளியிலும் சிந்தாமணியிலும் பீஷ்மர் நிராச்ரமி என்று அருளியதாகக் காண்கிறது. ஸ்ரீபாஷ்யத்தில் ‘ஹீஷ்மஸம்வர்த்தாதீநாம் நாச்ரமி ணாம்’ என்று காண்கிறதேயன்றி ஸ்ரீதேசிக ஸூக்தியிலோ திருக்குமாரர் ஸூக்தியிலோ பீஷ்மர் அநாச்ரமி, என்று இல்லை. ஆச்ரம தர்மங்கள் விசேஷமாக இராவிடிலும் ஸாமாந்ய தர்மங்களைக்கொண்டும் ப்ரஹ்மவித்யையின் அநுஷ்டாநமானது பீஷ்மாதிகளில்காண்கிறது. என்றிவ்வளவே அங்கு உள்ளது. ஆதிபதத்தில் விவக்ஷிதரான ஸம்வர்த்தரை ஆச்ரமி என்பதாக ஸயுக்திகமாய் ஸ்ரீதேசிகனே ஸமர்த்தநம் செய்தருளியுமிருக்கிறார். ஆகவே பீஷ்மர் ஆச்மஸ்தரேயானாலும் ஆச்ரமாஸாதாரண தர்மமின்மையால் அவரை உதாஹரித்தபடி.

ஸந்தேஹகர்த்தாவின் அபேக்ஷையின்படி ஸ்ரீபாஷ்யாதி ஸ்ரீஸூக்திகளுக்கும் பாவப்ரகாசிகா க்ரந்தபங்க்திக்கும் பாதகமில்லாமல் பொருத்தமுள்ள ஸமாதாநத்தை யதாமதி அடியேன் விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டேன். மைத்ரேயியைப் போன்ற ஸ்த்ரீகளும், ஸம்வர்த்தரைப்போனறவர்களும் ஆச்ரமிகள் என்பதையும் இந்த அதிகரணத்திலே அவர்களும் விவக்ஷிதர் என்பதையும் எண்ணிக்கொண்டு அநாச்ரமி சப்தார்த்தத்தை ஸஹ்ருதயர் நிர்தாரணம் செய்யவேணுமென்று ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ப்ரமாணாநுகுணபாடம்

[ஸ்ரீ. உப. வித்வான் வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி.]

‘ஸஹ்ஸ்ருவாஸெ’ என்று ஆரம்பமுள்ள தைத்திரீயோபநிஷத்தில் ‘வ்ராஜாவஹெஸ்ர ஷாரலணீ:’ என்று ஆரம்பமுள்ள அநுவாகமிருக்கிறது. அதில் ‘வஸாஸணெர விஹாஸவி’ என்றும் அதன் டிப்பணியில் ‘ஸணெஸ்ர உதி ஹாஷ்யஸ்யவிஸஊ: வா௦:’ என்றும் 1909-ம்வருஷத்தில் கும்பகோணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தைத்திரீயாரண்யக புஸ்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸாயண பாஷ்யத்தில் ‘வஸாஸெநா’ வஸூஸசகவஸ, ஸணொ— வஸிதா – சுயிதா’ (உண்மையைச் சொல்லுகிறவர்) என்று வ்யாக்யாநம் செய்திருப்பதாலும், பட்டபாஸ்கர பாஷ்யத்திலும் ‘ஸணொ’ என்கிற பாடத்தைக்கொண்டே வ்யாக்யாநம் செய்திருப்பதாலும்

‘ஶண்யா’ என்கிற பாடம் இரண்டு பாஷ்யங்களுக்கும் விருத்தமானது என்று டிப்பணிகாரரின் அபிப்பிராயம். ஸ்ரீரங்கராமாநுஜ பாஷ்யத்தில் ‘ஸர்வஶண்யா ஸர்வத்ரா வ்யூ:, ஶணமதாவிதி ஹி யாதா:’ என்று வ்யாக்யாநம் செய்து லக்ஷணையை ஆச்ரயித்து ‘ஸர்வ முதலிய எல்லா தேவதைகளாலும் உபாஸிக்கத்தக்கவர்’ என்று அர்த்தவர்ணநம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் ‘ஶண்வா’ ‘ஶண்யா’ என்கிற பாடங்களில் எது ப்ரமாணத்துக்கு அநுகுணமானது என்ற ஸந்தேஹமுண்டாகிறது. இது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களைப் பரிசீலனை செய்வதால் நீங்குகிறது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் மூலமந்த்ராதிகாரத்தில் ‘ஹவிர்குஹ்ய ஹீக்வாZZதூஶிவம் ஸர்வஶண்யதி ஶ்ருதம்: । ஜாஹாயாஸ ரூணவெநாநாவவ்யாதாவெ ஸநாதநே’ என்கிற ச்லோகம் ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிறது. இப்ப்ரமாணத்தில் ‘ஸர்வஶண்ய’ என்கிற மந்த்ரத்தால் என்று சொல்லியிருப்பதாலும் அதன் வ்யாக்யாநங்களில் ‘ஸர்வஶண்ய:’ என்கிற பாடத்தை அங்கீகரித்து வ்யாக்யாநம் செய்திருப்பதாலும் ‘ஶண்யா’ என்கிற பாடமே ப்ராமாணிகம் என்று ஏற்படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

புயலும் பொறுமையும்

(10-வது ஸம்புடம் 8-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, M. A. வித்வான் L. T. திருவையாறு]

பத்ரத்தை வாசித்துப்பார்த்த பார்த்தஸாரதியின் கண்கள் கண்ணீரால் மங்கின. அவன் தலை சுழன்றது. கைகள் நடுங்கின. பத்ரத்தைக் கீழே நழுவவிட்டான். ஸப்இன்ஸ்பெக்டர் யதுநாதனையணுகி மிகவும் மரியாதையுடன் ‘இவர் தங்களைச்சேர்ந்தவரென்று தெரிந்திருந்தால் நாங்கள் இவரைப்பற்றியும் இவரது கொள்கைகளைப்பற்றியும் இவ்வளவு கவலைப்பட்டிருக்கமாட்டோம். தங்கள் ஒன்றுவிட்ட ஸஹோதரன் என்று சொன்னீர்கள்? ஸரி சென்றுவாருங்கள்; கான்ஸ்டேபில்கள் செய்கையினால் நிகழ்ந்த தவறுதல்களுக்கு வருந்துகிறோம்’ என்றார். யதுநாதன் பார்த்தஸாரதியைக் கைபிடித்து ஸ்டேஷன்வாயிலில் நின்ற மோட்டார்வண்டிக்குச் செல்லும்பொழுதும், வழியில் கான்ஸ்டேபில்கள் மரியாதையாக அவருக்கு வந்தநஞ்செய்து விலகிநின்றபொழுதும் காரில் ஏறி மெத்தை ஆஸநத்தில் உட்கார்ந்தபொழுதுங்கூட ஸரியான ஜ்ஞாபகம் வரவில்லை. இது கனவா? நினைவா? தான் மனப்பூர்வமாக வெறுத்து வசைச்சொற்களால் தினந்தோறும் அவமானப்படுத்திவந்த யதுநாதனா தன்னிடமிந்த அன்புகாட்டியது! என நினைக்குந்தோறும் அவன் உள்ளம் வெட்கத்தாலும் மற்றும் புத்தம்புது உணர்ச்சிகளாலும் வாட்டப்பெற்றது. கார் புறப்பட்டது. மெத்தை ஆஸநத்தில் உட்கார்ந்திருந்த அவனது உடல் அந்தப் புது இன்பத்தை நுகரமுடியாமல் மனத்தில் உணர்ச்சி அலைகள் கொந்தளித்தெழுந்து போராடின. ‘என்னிடத்தில் ஏன் இந்த அன்பு காட்டவேண்டும். ஒருக்கால் என்வசைச்சொற்களுக்குப்பயந்தா? சீ! அப்படியிருந்தால் எவ்வளவோ மாதங்களுக்குமுன்னால் அவர் என்னை நயந்திருக்கவேண்டுமே! அவர் உள்ளம் கோழையல்லவே. அவரது மேன்மையில் எவ்வளவு உறுதி! அவரது தழதழப்பில் எவ்வளவு நிச்சயம்! அவரது அமைதியில் எவ்வளவு நன்மையின் புயல்!’ இது ஒரு உளப்பான்மை போலும்; வைஷ்ணவனது மநத்தில் யாரைக் குறித்தும் க்ஷாத்ரம் இருக்கக்கூடாதென்றும், சராசரமான ஸகல வஸ்த்துக்களும் ஸர்வாந்தர்யாமியான பரம புருஷனுடைய

சென்னை-600 008.

விபூதி என்று துணியும் அவனுக்கு ஸர்வபூதஸௌஹார்த்தமேஸ்வரூபமன்றி ஒரு பிறஉயிரிடம் ஒருநிமிஷமேனும் ப்ராதிகூல்யபுத்தி ஸ்வரூபஹாநி என்றும் ஸ்ரீவைஷ்ணவ தத்வ நூல்கள் பரக்கக் கூறுவதை இப்பொழுது உணர்ந்தான். ஈச்வரனுடைய உண்மை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. யதுநாதன்போன்ற பிறவிகள் உலகில் தற்செயல்களல்ல. ஸ்வபாமல்ல. ஒரு கருணாசக்தியின் ஸங்கல்ப்பவிசேஷத்தால் வரும் ஆவிர்பாவங்களே! வசைக்குத் துதியும், வன்மைக்கு மென்மையும், ப்ரதிகாரத்திற்கு நற்செயலும் காட்டிவருகிற இப்புண்யசீலர் மனப்பரிபாகந்தான் என்னே! என்று யோசித்து யோசித்து மநம் புழுங்கினான். கைகளை முகத்தில்வைத்துக் குலுங்கக்குலுங்க அழுதான். அழுதறியாத அவன்உள்ளம் அவ் வேதனையில் ஓர் இன்பத்தை அடைந்தது. கண்ணீர்! கண்ணீர்!! ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் இக் கண்ணீருக்களித்த பெருமையே! கஜேந்த்ரனைக் காத்தது அதன் கண்ணீர்! பாஞ்சாலியைக் காத்தது அவள் கண்ணீர்! ஸ்ரீ ஜானகிக்கு ஸர்வேச்வரனை உருக்கி சோகநாசம் செய்தது, திருவடிகண்டு ‘கிமிதம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி ஶோகஜம்’ என்று வியந்தது அவள் கண்ணீர்! ஆழ்வார்களது தாஸனாக அச்சுதன் ஆனதற்குக் காரணமும் ‘கண்ணநீர் கைகளால் இறைக்கும்’ என்ற அவர்களது கண்ணீரே! கண்ணீரா! அது முத்தருவியா? அம்ருததாரையா? இக் கண்ணீரை ப்ராப்த விஷயத்தில் பரமசேதனனின் காதலில்- காதற்பெருக்கில்- பெருக்கின் மயக்கில்- விடவல்லார் மாணிடரோ? அமரரே! பரிதபித்த உள்ளத்தினின்றும் எழும் ஒரு கண்ணீர்த் திவலைக்கு வானும் வையகமும் நிகரில்லை. மூவகைப்பட்ட தாபத்தையும் தணிக்கும்; கடலைச் சிறிதாக்கும்; மலையை நீராக்கும்; வானை அளந்து மீறி நிலவும்; வையகத்தைத் தழைப்பிக்கும். ஆழ்வார்கள் என் அழுதார்கள்? உலகெல்லாம் உண்டியே உடையே என்று உகந்துஓட அவ்வோடுமவர்களுக்காக அழுதவர் ஒரு பன்னிருவர்! இதுவே வைணவம். முத்தன்ன கண்ணீரை உகுத்து, மணியன்ன உள்ளத்தை ஈந்து, மாணிக்கம்போன்ற களங்கமிலா அன்பினைப் பெருக்கி, ‘என் முத்தே மணியே மாணிக்கமே’ எனப்பட்ட எம்பிரானை வசங்கொண்டனர். இத்தத்வங்களெல்லாம்- நூலில்மாத்ரங்கண்ட, இத்தத்வங்களெல்லாம்- இதுகாறும் தான் பரிஹஸித்துவந்த தத்வங்களெல்லாம்- அவன் மனத்தில் ஆரவாரித்தன.

மோட்டாரின் மேல்விட்டத்தில் உட்புறம் பதியப்பெற்ற சிறு மின்சார வெளிச்சத்தில் கண்ணீரால் நனைந்து கலங்கிய அவன் கண்களை யதுநாதன் கண்டார். வியப்பும் ஆனந்தமும் அன்பும் அவர் உள்ளத்தே மேலிட்டன. ஸர்வசக்தனுக்கு ஆகாத செயல் யாது? ஸர்வேச்வரனை அறிவது மனிதனாலாகும் செயலா! அவன்மாத்ரம் விரும்பின் நடவாத செயல் எது? யதுநாதன் கண்கள் அவனை அன்பினால் நோக்கின.

தன் மனத்திற்கினியனான ப்ராண வல்லபனையடைந்த தையல்நல்லாளின் கண்களில் ஒரு ஆனந்த ஒளி காணும். அதேஒளி பார்த்தஸாரதியின் கண்களில் வீசியதைக்கண்டு ஆச்சர்யமுற்றார் யதுநாதன். வெகுநாள் கணவனைப்பிரிந்து வெளிப்போந்து பிறகு நல்வினையால்மீண்ட நாயகியின் புதுமணத்தின் இன்ப ஒளி. இப்படி வாய்பேசாது இருவரும் செல்ல, பார்த்தஸாரதி தன் உள்ளத்தே ஒரு பெரும் புயலை அடக்கிவர, அரைமணிநேரத்தில் கார் வெள்ளேரியில் நுழைந்தது. பார்த்தஸாரதியின் வீட்டில் இருவரும் நுழைந்தனர். வீட்டில் வழக்கமில்லாத முறையில் நாலைந்து இடங்களில் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. குழந்தைகள் புது விரிப்புள்ள தூய புதிய படுக்கைகளில் உறங்கின. பார்த்தஸாரதி தலைவிரிகோலமான குடும்பத்தை எதிர்பார்த்துவர இவ்வளவு ஒழுங்கும் அழகும் காண அவன் மனம் பெருமிதம் கொண்டது. ‘உம் முன் நிற்கவும் எனக்கு யோக்யதையா’ என்று ஆத்திரத்துடன் கேட்டான். பெருங்காற்றில் சிறு இலைபோல்

அவன் உடல் நடுங்கியது. 'நான் உம்மை வைததை மறந்து உமக்கிழைத்த த்ரோஹத்தையெல்லாம் மறந்து என்று அவன் ஆரம்பிக்குமுன் யதுநாதன் 'பார்த்தஸாரதி! அதோ முற்றத்தில் வென்னீர் தயாராய் இருக்கிறது; ஸ்நாநாநுஷ்டாநம் முடித்துக்கொண்டு சாப்பிட வாரும். அம்மா வேதவல்லி! சாப்பாடு ஸித்தமா?' என்று கேட்டார். வேதவல்லி உள்ளிருந்தபடியே 'தயாராயிருக்கிறது' என்றாள். பார்த்தஸாரதிக்கு ஒன்றும் புரியவில்லை. கைகுவித்தான் கண்ணீருகுத்தான். 'என் தெய்வமே!— ஆமாம் நான் ஏன் வெட்கப்படவேண்டும்? உலகில் தெய்வமுண்டு, தெய்வ அருள் உண்டு. இல்லையென்றால் இல்லையாகிவிடுமா? என் அறிவெல்லாம் பாழாயிற்று. புகைவண்டித்தொடரை இயக்கும் யந்த்ரம் தன் ஆற்றலை நல்ல வழியில் (தண்டவாளத்துடனேயே) செல்வதில் காட்டினால் மங்களமுண்டு. வழி சிறிது தவறினால் ஸர்வநாசம். அதுபோலவே அறிவுவழி தவறியதால் என்னையும் கெடுத்து என்னைச் சார்ந்துநின்ற துர்பாக்யம்படைத்த பிறரையும் கெடுத்தேன். நம்பினவரை மோசஞ்செய்தேன். பொய்யை மதமாக ப்ரசாரம் செய்தேன். த்வேஷத்தை வளர்த்தேன்; அமைதியைக் குலைத்தேன். ஆனால் என் உள்ளத்தில் மக்கள் அன்பு சிறிது இருந்தது. ஏழைகளைப்பற்றி சிறிது இரக்கம் உண்டு. உலகம் வாழவேண்டுமென்ற ஊக்கம் சிறிது இருந்தது. அது என்னகாரணத்தாலோ சோபிக்கவில்லை. நான் செய்த பாபங்களை நினைத்தால், ஆனால் நான் அநுபவித்த துயரங்களை நினைத்தால்...மக்கள் அழ, மனைவி ஏங்கப் பரிஹாரஞ்செய்ய ஆற்றலில்லாத என் இரக்கம் என்ன பயனாயிற்று. யதுநாதரே! நீரே என் வாழ்வின் ஒளி; நீரே எனதாவியின் குரு. நீரே என் பிணிக்கு ஸஞ்சீவி; நீரே என் குடும்பத்தின் ......'என்பதற்குள் 'மித்ரன்' என்றார் யதுநாதன். 'ப்ரத்யக்ஷ தெய்வம்' என்றுசொல்லி யதுநாதன் கால்களில் சாய்ந்தான் பார்த்தஸாரதி, அவனை வாரியெடுத்து உடம்புதுடைத்து 'பார்த்தஸாரதி! ஏதோ ஸுக்ருதவசத்தால் ஏற்காதபணப்பெருமை உடைய என்னை இப்படி நீர் புகழ்வது ந்யாயமன்று. நான் என்ன செய்யமுடியும். தெய்வத்தின் கருணையே ஸர்வகாலமும் ஜயிக்கிறது. இதை மறந்து அசக்தனான ஒரு பாமரனை ஏன் புகழவேண்டும்? கொஞ்சம் உமக்குப் புண்யமுண்டு, உமது வருகைக்காகக்காத்து உண்ணாமலிருக்கும் வேதவல்லிக்காக உண்ண விரைவீராகவும்' என்றார் யதுநாதன். வேதவல்லி ஸ்நாநத்திற்குவேண்டிய சுச்ரூஷாதிகளைச் செய்தாள். பார்த்தஸாரதிக்குப் பலவருஷங்களுக்குமுன் கவலையற்றகாலத்தில் சிறுபெண்ணாகத் தனக்கு அவள் புதுமணத்தொண்டு செய்தகாலத்தில் என்ன உணர்ச்சிகள் முகத்தில் ஜ்வலித்தனவோ அத்தகைய உணர்ச்சிததும்பும் முகத்தை இப்போது பார்த்தான். பதினைந்துவருஷங்கள் இளையவனானதுபோல் தோன்றிற்று. என்னே தயையின் பெருமை! குடிசையை அரண்மனையாக்குகிறது; அழுகையைச் சிரிப்பாக்குகிறது; குறையினால்வரும் பிதற்றற்சொற்களை மகிழ்ச்சிப் புலம்பலாக்குகிறது; கோபக்கிளர்ச்சியின் வெவ்விய கனலை அடக்கி அபரிமிதமான ஆநந்த சைத்யத்தை உண்டுபண்ணுகிறது. ஓ தயையே! உனக்கு மறுபெயர் என்ன? தாமோதரனே!

ஸ்நாநம்செய்து சித்தமாயிருந்த பார்த்தஸாரதி 'ஸ்வாமிந்! தேவரீர்......'எனும்பொழுது யதுநாதன் 'நீ உண்டு இளைப்பாரத்தொடங்கியவுடன் நான் வீட்டிற்குப் போகிறேன். இன்னும் ஒரு ஆநந்தம் என் கண்ணால் பார்க்கவேண்டும்' என்றார்.

பார்த்த—அது என்ன! என் உயிரையும் கொடுக்கத் தயா.........

யது — அப்படியொன்றும் வேண்டாம். உமது உதார சித்தத்தின் மன்னிப்பை மாத்ரம் அளித்தால் போதும்.

பார்த்த—யாருக்கு மன்னிப்பு?

யது—உமது ஏழ்மைக்கும் வெந்துயரத்திற்கும், எல்லையில்லாத பசிபட்டினிகளுக்கும், உமது குழந்தைகளின் துடிப்பிற்கும், குணவதியான உமது பத்நியின் கண்ணீரருவிகளுக்கும் காரணமாயிருந்த கிராதகனான என்னை மன்னியும்' என்று பார்த்தஸாரதியை விழுந்து

நமஸ்கரித்தார். 'ஹா! இதென்ன அநீதம்' என்று பார்த்தஸாரதியும் வேதவல்லியும் பதற யதுநாதன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'காரணத்தை வேதாந்திகள் ஸாக்ஷாத்தென்றும் பரம்பரை என்றும் இரு விதமாகக் கூறுவர். உமது துயருக்கெல்லாம் என்னை எந்த காரணத்தில் சேர்த்தாலும் தகும்' என்றார். பார்த்தஸாரதி பதறிக்கொண்டு 'ஸ்வாமி! சற்றுமுன்பு தாம் வற்புறுத்திய ஸர்வேச்வரனையும் அவனுடைய அஸங்குசிதமான சக்தி வைபவத்தையும் மறந்துவிட்டீர்கள் போலும்! என் துயரத்திற்கும் தேவரீருக்கும் இயைபு யாது? இருளும் ஒளியும் கிழக்கும் மேற்கும் இடமும் வலமும் புண்யமும் பாபமும் நரகமும் ஸ்வர்க்கமும் ஒன்றாகுமா? ஸ்வாமி! இப்படி சோதனை செய்யலாமா? இப்படி வீற்றிருக்க வேண்டும். வேதம்! இலையைப்போடு' என்றான். வேதம் பேசாமல் நின்றாள். 'உன்னை அதிகாரம் செய்ய இந்தப் பாபிக்கு ஏது பதம்' என்றான். உடனே யதுநாதன் 'உனக்குத் தொண்டுசெய்ய வருகிறவர் இப்போது வேறு ஒருவர்' எனும்பொழுதே உள்ளிருந்து பத்மா வந்து ஒரு இடத்தை சுத்திசெய்து இலையையும் சேர்த்தாள். 'பத்மா! உன் வாழ்வைக் குலைத்து அக்நிக்குச்சமமான இப் புண்யபுருஷனுடன் உன் பெயரை இணைத்து நரகத்தை எளிதிலே பெற்ற இந்த ப்ரஹ்மராக்ஷஸனுக்கா சுச்ரூஷை செய்யவந்தாய்!! ஆனால் முடியும்! முடியும்! யதுநாதனிடம் சேர்ந்தவர்களுக்குப் பொறுக்கமுடியாத பாபம் ஏது உண்டு? உன்னை வியந்தால் யதுநாதனையே குறைவாக எண்ணும் அபசாரம் ஏற்படும்' என்றான் பார்த்தஸாரதி. பத்மா தன் மாமாவை நமஸ்கரித்து 'மாமா! என் தப்பிதங்களை மன்னியுங்கள். நீங்கள் குற்றமில்லாமல் வீடு திரும்பி மனைவிமக்களுக்காக வரும் ஆநந்தத்தில் நானும் பங்கெடுத்துக்கொள்ளலாமென்று நினைத்து வந்தேன். உமது கருணையைப் பெற்றேன். இனி அடிக்கடி இங்கே வரப்போக......' என்றாள். யதுநாதன் 'நீ இவர்களுடனேயே வேண்டுமானாலும் இருக்க ஏற்பாடு செய்கிறேன். அது கிடக்கட்டும், அவரைச் சாப்பிடச்செய்' என்றார். பார்த்தஸாரதி உண்ணும்போது அவனையே ஆவலுடன் நோக்கினார் யதுநாதன். ஐயோ! என்ன பசி! எவ்வளவு கஷ்டம். ஆவலுடன் பசித்து உண்பவரைக்காண்பதே ஒரு பெரிய பாக்யமல்லவா! ஏராளமான பணத்தை வைத்துக்கொண்டு சிறிதளவும் உண்ண சக்தியில்லாமல் ஒரு சாப்பாடுமாத்ரம் உண்பவர் எவ்வளவு பெயர்கள்! கடுகளவு சாப்பாட்டிற்கு மலையளவு மருந்து வாங்கி வைத்துக்கொண்டு சாப்பிட்டு உணவை உட்செலுத்த படாதபாடு படுகின்றனர். பலருக்கு அந்நமிடும் விருந்து கோஷ்டிகளில் வயிறார உண்ணும் ஏழைகளைக் கூப்பிடுபவர் யார்? 'எனக்குவேலை யிருக்கிறது' 'நான் தொடவேமாட்டேன்' 'ஒரு திணையளவு பரிமாறுங்கள்' 'ஊஹூம். வேண்டாம்' என்று மறுக்கும் பணக்கொழுப்பாளர்களே அழைக்கப்பெறுகின்றனர்; உபசரிக்கப் பெறுகின்றனர். அவர்களோ தங்கள் வரவினால் பிறரை அநுக்ரஹிப்பதுபோன்ற உணர்ச்சியுடன் வருகிறார்கள். ஏங்கிய ஏழைகளை கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இனிய பண்டங்களை அவர்களுக்கு வற்புறுத்திப் பரிமாறுபவர்களும் இல்லை. பசியால் வாடிவரும் ஒரு ஏழை பற்பநாபனது வடிவமே! அவனுக்கு அளிக்கும் அந்நம் திவ்யமான ஹவிஸ்ஸாகும். ஏழைகளுக்கு அந்நமிடும் செயல் ஒரு அரிய யாகமாகும். ஒரு ஏழையை 'வா' என்றுசொல்லி உபசரிப்பது ஸர்வேச்வரன் திருவடிகளில் ஸஹஸ்ரநாமார்ச்சனையாகும். தீநனும் ஆவலுடையவனுமான ஒரு விருந்தினனிடம் சொல்லப்பட்ட உபசாரச் சொற்கள் நித்யமான வேதங்களின் கீதம்போல ஸர்வேச்வரனுக்குப் பரம போக்யமாகும். ஆஹா! வைரங்கள் ஒழிந்து நல்ல மனப்பான்மை ஓங்கும் இடங்களில் என்ன ஆநந்தம் உலவுகிறது! பிணங்கி காமக்ரோதாவேசத்தினால் வேறுபட்ட இரண்டு உள்ளங்கள் ஒன்று சேரும்பொழுது நித்யஸூரிகள் இதுவே நன்னாளெனக்களிப்பர். மனைவியிடம் கோபித்துவைதவனுக்கு மாதவனிடம் என்னவேலை! மக்களை அடித்துத் துன்புறுத்திய ஒருவன்

கோயிலிற் செய்யவேண்டிய கடமைதான் என்ன உண்டு? உன்னுடன் த்வேஷத்தில் ஒருவனை வைத்துக்கொண்டு உன் ஆஹ்நிகங் களைச்செய்யும் பெருமைதான் என்னே! கால விளம்பமானாலும் உன்னுடன் மாறுபட்ட ஒரு பாகவதனைப் புரஸ்கரித்து மகிழ்வித்துப் பின்னர் உன் அநுஷ்டாநங்களைச் செய்' யது நாதன் உள்ளத்தில் இப்படியெல்லாம் எண் ணங்கள் சுழன்றன.

பார்த்தஸாரதி சாப்பிட்டான். எழுந் தான்; யதுநாதன் 'உமது குழந்தை ஸரஸாவை கர்நூல் ஜில்லாவில் உமது உறவினர் ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறீரல்லவா?' என்றார். பார்த்தஸாரதி துக்கத்துடன் "ஆமாம்; ஆற்றில் எதியாத குற்றமாக அவர் களுடன் அனுப்பினேன். 'வீட்டில் துணை யாக ஒரு குழந்தை வேண்டும்' என்றுசொல்லி அழைத்துச்சென்று வேலைக்காரியாகவே வளர்த்துவருகிறார்கள் என்று கேள்வி. என் குழந் தை வயிற்றாவது உண்பாளென்பது ஒரு ஸந்தோஷம் உண்டு. நாலு குழந்தைகளுக்கு நடுவில் அவர்களுக்குத் தொண்டுசெய்து வளரு கிறது. வயிற்றுக்கொடுமையினால் அனுப்பி வைத்தேன். பத்மாவைப் பொய்சொல்லி விரட்டியது மஹாபாபமல்லவா? அதற்குத் தான் இப்படி அநுபவிக்கிறேன்' என்றான். வேதவல்லியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'கூடியசிக்கிரம் ஸரஸாவை அழைத்துவர ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படவேண்டாம்' என்றார் யதுநாதன். தம்பதிகளிருவரும் யதுநாதனை வணங்கினர். யதுநாதனது மன த்தில் பேரின்பம் உதித்தது. 'இனி ஸ்ரீ வேணுகோபாலனருளால் நீங்கள் உங்கள் குழ ந்தைகளுடன் இனிது வாழுங்கள். உமக்குச் சென்னையில் ஒரு உத்யோகம் காத்திருக்கிறது. கவலை வேண்டாம் என்றார் யதுநாதன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸத்யம் வத

(10- வது ஸம்புடம் 8-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான், தேசிகதர்சநவிஜயத்வஜ,
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.]

ரதிஸம்ப்ரயோகத்தில்

'ஸ்த்ரீஷு நர்மவிவாஹேஷு
வ்ருத்த்யர்த்தே ப்ராணஸங்கடே ।
கோப்ராஹ்மணார்த்தே ஹிம்ஸாயாம்
நாந்ருதம் ஸ்யாத் ஜுகுப்ஸிதம் ॥'
(பாகவதம் – ஸ்க - 8 - அத் - 19.)

[ஸ்த்ரீகள் விஷயத்திலும், பரிஹாஸத்திலும், கல்யாணத்திலும், உயிர் போகக்கூடிய காலத் தில் ஜீவித்திருப்பதற்காகவும், பசுமாடு, ப்ரா ஹ்மணர், இவர்கள் விஷயத்திலும், ப்ராணி ஹிம்ஸாநிவ்ருத்திக்காகவும் பொய்சொல்வது குற்றமாகாது]என்றுசொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஸ்த்ரீகள்விஷயத்தில் என்பதற்கு ரதி காலத்தில் என்று வ்யாக்யாநம் செய்யப்பட் டிருக்கிறது. ஸ்ரீ ராமன் ராஜ்யத்தைவிட்டு போகும்போது கௌஸல்யையிடத்தில்:—

'சதுர்தச ஹி வர்ஷாணி
வத்ஸ்யாமி விஜநே வநே ।
மதுமூலபலைர்ஜீவந்
ஹித்வா முநிவதாமிஷம் ॥'

[நான் முனிகளைப்போல ஆமிஷமென்று சொல் லப்படுகிற மாம்ஸத்தைவிட்டு, தேன், கிழ ங்கு, பழம் இவைகளை ஆஹாரம்பண்ணிக்கொ ண்டு ஜனங்களில்லாத காட்டில் பதினான்கு வர் ஷகாலம் வஸிக்கப்போகிறேன்] என்று சொன் னதற்கு விருத்தமாக

‘தௌ தத்ர ஹத்வா சதுரோ மஹாம்ருகாந்
வராஹம்ருச்யம் ப்ருஷதம் மஹாருரும் ।
ஆதாய மேத்யம் த்வரிதம் புபுக்ஷிதௌ
வாஸாய காலே யயதுர்வநஸ்பதிம் ॥’

‘பஹூந் மேத்யாந் ம்ருகாந் ஹத்வா
சேரதுர்யமுநாவநே ।’

என்று சொல்லுகிறபடியே பல ம்ருகங்களைக் கொன்று சாப்பிட்டதாகச்சொல்லுவது உசிதமாகுமோ என்று ஶங்கையுண்டாகலாம்.

இதற்கு ஸமாதாநம்:—

எல்லா ஸம்ஸ்க்ருத ஶப்தங்களுக்கும் அர்த்தங்களை ப்ரமாணங்களோடு எழுதியிருக்கிற ஶப்தகல்பத்ருமம் என்கிற க்ரந்தத்தில் ‘மேதினீஎன்கிற கோசக்ரந்தத்தில் ஆமிஷஶப்தமானது போக்யங்களான வஸ்துவிசேஷங்களைச் சொல்லுகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது’ என்று சொல்லியிருப்பதாலும், பாரதம்—ஶாந்திபர்வத்தில் — அத்— 337ல் நாரதர் ஸ்ரீ சுகரைக்குறித்து மோக்ஷோபாய தர்மங்களை உபதேசிக்குமிடத்தில்

‘ஸ்யாத்ர ராத்ரிவாஸீநோ
நிரபேக்ஷோ நிராசிஷ: ।
சுத்தேநைவ ஸஹாயேந
யஸ்த்வரேச்ச ஸமாஹிதஸ்ஸ ॥
நிராசிஷா ந சோசந்தி
த்யஜந்தாசிஷமாத்மந: ।
பரித்யஜ்யாசிஷம் ஸர்வ
மூர்த்வம் தாபாதிமோக்ஷ்யஸே ॥’

என்று யோகஸித்தியையடைந்த சுகருக்கு ஆமிஷத்தை விடுவதை ஸம்ஸாரதுக்க நிவ்ருத்திக்குக் காரணமாக உபதேசிப்பதால் ஆமிஷஶப்தமானது ராஜாநுபவ யோக்யங்களான உயர்ந்த சந்தநம், புஷ்பம், பன்னீர், புனுகு முதலிய வாஸநாத்ரவ்யங்களையும் உயர்ந்தபக்ஷ்யங்கள், போஜ்யங்கள், படுக்கைகள், ஆடைகள், ஆபரணங்களையும் சொல்லுகிறதென்பதுதான் உசிதமாகும். ஐஹிகாமுஷ்மிகபோகங்களில் ஆசையில்லாதவன்தான் மோக்ஷத்தில் ப்ரவ்ருத்திக்க யோக்யனாகிறான் என்று பரீக்ஷ்யலோகாந் என்கிற வேதம் முறையிடுகிறது என்பது ப்ரஸித்தம். ஆகையினால் ‘நானிதுவரையிலநுபவித்துவருகிற ஸகல ராஜபோகங்களையும்விட்டு முனிகளைப்போல காய்கிழங்குகளை சாப்பிட்டிருக்கப்போகிறேன்’ என்பதைத்தான் ‘ஹித்வா ஆமிஷம்’மென்கிற வாக்யத்தினால் ராமன் சொன்னான். மாம்ஸத்தை விடுவதாகச் சொல்லவில்லை ஆகையினால் விரோதமில்லை.

(ஸர்வதநாபஹாரே)பன்னிரண்டுவருஷகாலம் காட்டில் வஸித்துப் பிறகு ஒரு வருஷகாலம் தங்களை ஒருவரும் ‘இவர்கள் பாண்டவர்கள்’ என்றறிந்து கொள்ளாதபடி வேறு வேஷம் பூண்டு விராட நகரத்தில் வஸித்த பாண்டவர்கள் அந்நகரத்தில் ப்ரவேசிப்பதற்கு முன் தங்களிடமிருந்த காண்டீவம் முதலான திவ்யாயுதங்களை ஸம்ரக்ஷித்து வைக்கவேண்டியதற்காக அந்த ஆயுதங்களை எல்லாம் ஒன்றுசேர்த்துக் கட்டி அவைகளுடைய ஸமீபத்தில் ஒருவரும் போகாமலிருப்பதற்காக விராடநகரத்தின் ஸமீபத்திலிருந்த ருத்ரபூமியில் கிடந்த ஓர் பிணத்தையும் அவ்வாயுதங்களோடு சேர்த்துக்கட்டி அவைகளை அந்த ருத்ரபூமியிலிருந்த ஓர் உயர்ந்த மரத்தின் கிளையில் கட்டித் தொங்கவிட்டு அந்த ஆயுதங்களை ஒருவரும் எடுக்காமலிருப்பதற்காக அவ்விடங்களில் மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்த பல மனிதர்களிடம் போய்:—

‘இயம் சதவர்ஷீயம்
மாதா நஸ் ஸாக்ஷிதாந்திகே ।
பஹுகாலவ்ரீணாநா
ம்ருதேத்யாஸ்தா வயஸ்யோஷி ॥
நவாஹ்ரிஸம்ஸ்காரியம்
ஸம்ஸ்காரா க்ஷமயோத்தித: ॥’

[ஸோதமார் என்பது, நூறு வயதுள்ளவளாய் நீண்டகாலமாகத் தளர்ந்துபோன தேஹத்தை உடைய எங்களுடை தாயார் இங்கு இறந்து போய்விட்டாள். எங்கள் குலத்தில் இறந்து போனவர்களுக்கு அக்நிஸம்ஸ்காரம் பண்ணுகிறதில்லை. காலில் கயிற்றைக் கட்டி சுடுகாட்டு மரத்தில் தொங்கவிடுவதுதான் வழக்கம்; எங்கள் குலத்தின் வழக்கப்படி நாங்கள் தாயாருக்கு ஸம்ஸ்காரம் செய்திருக்கிறோம்] என்று சொல்லிக்கொண்டு போனதாக பாரதத்தில்

விராடபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மஹாதார்மிகர்களான பாண்டவர்கள் இப்படி ஒரு பொய் வார்த்தையைச் சொன்னதனுல் ஸர்வ ஸொத்துக்களையுமிழந்து அந்த ராஜ்யத்திலு மதிகங்களான ஆயுதங்களாகிற ஸொத்துக்களையும் ரக்ஷிக்கமுடியாத ஆபத்காலத்தில் தங்களுடைய ஸொத்துக்களை ரக்ஷித்துக்கொள்வதற்காக ஒருவருக்கும் ஒருவிதமான தீங்குக்கு ஹேதுவில்லாத பொய்யைச் சொல்வது குற்றமாகாது என்று தீர்மானிக்கப் படுகிறது.

'ஸ்த்ரீஷு நர்ம விவாஹேஷு' என்று கீழே சொல்லப்பட்ட பாகவத வசநத்தினுல் பரிஹாஸவார்த்தைகளில் பொய்பேசுவது குற்றமாகாது என்பதற்கு:—

ஸ்ரீ ராமனுடைய தேஹ ஸௌந்தர்யத்தைக் கண்டு காம பரவசையான சூர்ப்பநகை ராமனிடம் போய்ப்ப்ரார்த்திக்க, 'ஸ்த்ரீகளுக்கு மற்றொருஸ்த்ரீயோடு (சக்களத்தியோடு) சேர்ந்திருப்பது மஹத்தான துக்கத்தை விளைவிக்கும். ஆகையினுல் ஸ்த்ரீஸஹாயமில்லாத லக்ஷ்மணனிடம்போய் நீ ப்ரார்த்திப்பதே உசித'மென்று ராமன் சொல்ல, அதைக்கேட்டு அவள் லக்ஷ்மணனிடம் வந்து ப்ரார்த்திக்க, அவள்வார்த்தையைக்கேட்ட லக்ஷ்மணன்:—

'ஏநாம் விரூபாமஸதீம்
கராலாம் நிர்ணதோதரீம்|
வ்ருத்தாம் பார்யாமபித்யஜ்ய
த்வாமேவைஷ பஜிஷ்யதி||' என்கிற

வாக்யத்தினுல் [ராமனுக்கு மற்றொரு பார்யை இருந்தாலும் அவள் அழகில்லாமலும் பதிவ்ரதையாக இல்லாமலும் பயங்கரமான ரூபமுடையவளாயும் முதுகில் ஒட்டிப்போன வயிற்றையுடையவளாயும் அதிக வயதுமுதிர்ந்த கிழவியாயு மிருப்பதால் ராமன் அந்த பார்யையை வேண்டாமென்று தள்ளிவிட்டு உன்னையே விரும்பி இருப்பர்] என்று சொன்னுன்.

இங்கு லக்ஷ்மணன் ஸீதையைக் குறித்துச் சொன்ன வார்த்தைகளெல்லாம் பொய்யானவைகள். ஆகையினுல் பரிஹாஸ வார்த்தைகளில் பொய்சொல்வது குற்றமல்லவென்பதற்கு இது உதாஹரணமாகிறது. இவ்விஷயத்தை வால்மீகி மஹர்ஷி 'மேநே தத்வசஸ் தத்யம் பரிஹாஸாவிசக்ஷணா' என்கிற வாக்யத்தினுல் பரிஹாஸரஸமறியாதவளாகையினுலே சூர்பநகை லக்ஷ்மணவாக்யத்தை ஸத்யமாக நினைத்தாள் என்று சொல்வதால் வ்யக்தமாக்கினுர்.

'நாஶக்யா குணா நாஶு
வக்தும் ஸத்யஸ்ய பார்த்திவ!|
அதஸ்ஸத்யம் ப்ரஶம்ஸந்தி
விப்ராஸ்ஸபித்ருதேவதா: ||
உபைதி ஸத்யாத்தானம் ஹி
ததா யஜ்ஞாஸ்ஸதக்ஷிணா: |
த்ரேதாக்நிஹோத்ரம் வேதாஶ்ச
யே சாந்யே தர்மநிஶ்சயா: ||
அஶ்வமேதஸஹஸ்ரஞ்ச
ஸத்யஞ்ச துலயா த்ருதம் |
அஶ்வமேதஸஹஸ்ராத்தி
ஸத்யமேவ விஶிஷ்யதே ||'

ஶாந்திபர்வம் அத்- 160-ப-420

[மனிதன் ஸத்யம் சொல்வதினுலேயே தாநம், யஜ்ஞம், அக்நிஹோத்ரம் மற்றும் எல்லாதர்மங்களையும் அநுஷ்டித்த பலன்களை அடைந்துவிடுகிறுன். ஸத்யதர்மத்தினுடைய குணங்களை வாயினுல் சொல்லிமுடித்துவிடமுடியாது. ஆகையினுல் ப்ராஹ்மணர்கள், பித்ருக்கள், தேவதைகள் ஸத்யத்தையே மிகவும் கொண்டாடுகிறுர்கள். ஆயிரம் அச்வமேதயாகதர்மமும் ஸத்யதர்மமும் தராசினுல் நிறுக்கப்பட்டது. ஆயிரம் அச்வமேததர்மங்களைக்காட்டிலும் ஸத்யதர்மமே அதிகமாக இருந்தது.] ஆகையினுல் தான் ஹரிச்சந்த்ரமஹாராஜன் ஸ்வர்க்கத்தில் பூர்ணசந்த்ரன் போல் மிகவும் ப்ரகாசிக்கிறுன் என்று சொல்லப்பட்டது.

ஸத்யதர்மம் ச்ரமமில்லாமல் அநுஷ்டிக்கக் கூடியது. யாகம் முதலான சில தர்மங்களைச் சில ஜாதி, சில ஆச்ரமம், சில தேசம், சில காலம், சில அவஸ்தைகளில்தான் செய்யவேணுமென்கிற நிர்பந்தங்களுண்டு. ஸத்யதர்மத்தை அநுஷ்டிப்பதற்கு அந்த நிர்பந்தங்கள் கிடையாது. வேறு சில தர்மங்களைச் செய்வதற்கு பணச்செலவு, தேஹச்ரமம், மற்றொரு

மனுஷ்யர்களுடைய அபேக்ஷைகள் அவச்யம் வேண்டியதாகும். ஸத்யதர்மத்திற்கு அவை கள் ஒன்றும் வேண்டா. ஸந்த்யோபாஸநம் முதலிய சிலதர்மங்களை அநுஷ்டிக்கவேண்டிய வர்கள் ஒருநாள்கூட விடாமல் செய்யவேண் டும். ஒருவேளை செய்யாவிட்டால் ப்ராயச்சித் தமுண்டாகும். ஸத்யதர்மத்திற்கு அப்படி நிர்பந்தமில்லை. இஷ்டமிருந்தபோது செய்ய லாம். இஷ்டமில்லாதபோது செய்யாதிருக்க லாம். ஆகையால் ஸத்யதர்மத்தில் இவ்வளவு ஆநுகூல்யமிருப்பதால் இதை ஸர்வமனிதர்க ளும் அநாயாஸமாக வநுஷ்டித்து பேரின்பத் தை யடையலாம்.

'ஸத்யம் வத' என்பதினால் ஒரு ஸத்ய வார்த்தை சொல்லும்படி விதிக்கப்படுகிற தென்றால் மற்றொரு ஸத்யவார்த்தை நிஷேதிக்கப்படும். ஏகவசனத்தை ஜாத்யேக வசனமாகக்கொண்டால் ஸர்வஸத்யவார்த்தை களையும் சொல்லவேண்டியதாக முடியும். அது முடியாத விஷயம். முடிந்தவரையில் ஸத்யத் தையே சொல்லவேண்டுமென்றால் மற்றதை எல் லாவற்றையும் விடவேண்டியதாகும். ஸத்யத் தைச் சொல்லியே தீரவேண்டுமென்றால் சில ஸத்யத்தைச் சொல்லக்கூடாதென்கிற விதி யோடு விரோதிக்கும். ஸபைகளில்தான் அப் படி நிர்பந்தமுண்டு. மற்ற இடத்தில் அது கிடையாது. ஸத்யத்தையே சொல்லு, பொய் யைச் சொல்லாதே என்கிறதென்றால், ஶப்த ஸ்வாரஸ்யத்திற்கும், விதிப்ரகரணத்திற்கும் விருத்தம். ஆகையினால் பேசவேண்டியதவச் யமாக ஸம்பவித்தால் அதை ஸத்யத்வ குணவி சிஷ்டமாகப் பேசு என்று இதற்கு அர்த்தம் சொன்னால் அதினாலேயே பொய்யும் நிஷேதிக் கப்பட்டதாகிறது.

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிகனும் தமிழ்மறையும்

[ஸ்ரீ. உப. இளையவில்லி, தி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.]

ஸ்மயே ஸததம் ஸ்ராணாஜஸயிம்
ஸ்ராணாவிஷயம் ஸமோாயிவதெ: ।
ஸ்ரீவெஸிஶாஸிவவொ ஶஸிகம்
ஸவிதாகிஸ்கெஸஸிஸஷிஶராஷ் ॥

உலகில் ப்ரமாணதமமாக விளங்குவது வேதம் என்றும், மறை என்றும் சொல்லப் படும்; தன்பக்கலில் பக்தியுற்றார்க்குத் தன் படியைப்பாங்காகப் பாவி நிற்கும்படி பாரித்து நிற்றலால் வேதம் என்றும், தன்னிடம் பக்தி யில்லாத பாவிகளுக்குத் தன்னிலை தெரியாமல் மறைத்தே நிற்றலால் மறை என்றும் பெயரி னைப் புனைந்துநிற்கும். ஆனால் வேதம் மறை என்ற இருபெயரினைப் பெற்றாலும் சொல்லப் படுமது ஒன்றே. இதன் ப்ராமாண்யத்தை 'ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜ முச்யதே । வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி... ॥' என்று முன்னோர்கள் அறுதியிட்டார்கள். ஆகவே அனைத்துலகும் ஸர்வேச்வரன் ஆணை யான வேதம் வகுத்த வழியிலே நடக்கக் கட மைப்பட்டிருக்கிறது. இந்த வேதம் தான் வட மொழி தென்மொழி என்ற இருவகை பாஷை யிலும் விளங்கி நின்று எல்லோர்க்கும் ஹிதத் தையளிக்கிறது. இவ்விருமொழி வேதங் களும் ஒரு காலவிசேஷங்களில் மறைந்தாலும், அப்படியே மறுபடியும் மஹர்ஷிகள் கண்டு வெளியிட்டுதவுவார்கள் என்பர் அறிஞர். இவ்விருமொழி வேதங்களிலும் ஸ்ரீவைஷ்ணவ ரான நமக்கே பூர்ணபாத்யமுள்ளது. வடமொழி வேதத்தைமட்டில் விரும்பி நிற் கிற த்வைதிகளுக்கும், அத்வைதிகளுக்கும், வடமொழி, தென்மொழி வேதங்கள் இரண் டையும் ஏற்றத்தாழ்வின்றி ஓதி நிற்கிற ஸ்ரீ விசிஷ்டாத்வைதிகளுக்கும், ப்ராஹ்மண் யம் என்பது பொதுவாக இருந்தபோதிலும், ஸ்ரீவைஷ்ணவத்வம் என்பது சுத்தாந்தஸித் தாந்திகளென்று புகழநிற்கிற நமக்கே தகும். 'நன்குருகூர்ச்சடகோபன் சொன்ன குறிகொ

னாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடி யதன்மேல், அறியக்கற்றுவல்லார் வைட்ணவ ராழ்கடல் ஞாலத்துள்ளே’ என்று நம்மாழ்வார் வெளியிட்டருளியபடியே அருளிச்செயல்களான ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளை அநுபவிக்கும் பாக்யம் நமக்குள்ளதனால், உபயவேதவேதாந்தமுடையவர்களென்ற உத்தமமான பிருதத்தைப்பெற்று விளங்குமவர்கள் நாமேயன்றோ? ஆகவே, நம்மவரில் எவர் எந்தவேதத்தைக் குறைவுபடுத்திப் பேசினாலும் அது தகாததே. நம் தேசிகனும் ‘தொண்டைமண்டல வேதியர் வாழவே, தூய தென்மறை வல்லவர் வாழவே’ என்றே பொதுவாக இனிதிறைஞ்சிநின்றார்.

இவருக்கு இரு வேதத்திலும் படிந்து குடைந்தாடிப் பலபடி அநுபவங்களைக் கொள்ளும் பாக்யமிருக்கச்செய்தேயும், ஆழ்வார்களருளிச்செயலான தமிழ்மறையினிடத்தே உள்ள காதல் கடலில் மிகப்பெரிதாக விளங்கும்.

தமிழ்மறையென இத்தரணியிலும், திவத்திலும், தனித்தோங்கிநிற்கும் அருளிச்செயல்களைக் கண்டு வெளியிட்டவர்கள், எம்பெருமானால் மயற்வறமதிநல மருளப்பெற்ற மஹாபாக்யாதிகர்களான ஆழ்வார்கள்.

இதனை நம்தேசிகன் ‘பராங்குஶ பரகாலாதிரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி, மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே, வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக்காட்டியும்’ என்றருளிக் கொண்டாடினர்.

ஆழ்வார்களுக்குப் பிறகு நெடுநாள் தமிழ்மறை தழைத்தோங்கி வளர்ந்து வந்து ‘ஆராவமுதே’ என்கிற திருவாய்மொழியும், கண்ணிநுண் சிறுத்தாம்பு’ என்கிற ஒரு அழகிய ப்ரபந்தமும் நீங்கலாக மற்றவை இந்நிலவுலகினில் மறைந்து கிடக்க, ஸ்ரீமந்நாதமுநிகள் என்கிற மஹாயோகியை அவதரிப்பித்து அவர் முகமாக மறுபடியும் முன்போலவே, மலருலகில் மகிழ்ந்து வாழும்படி மலர்மகள் கேள்வன் மனமுவந்தருளினன்.

இப்பெருமைதன்னையும், ‘இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாகவுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திருவாய்மொழி முகத்தாலும் யோகதசையில் ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வாராசார்யரானார்’ என்றும், ‘காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத் தாளம் வழங்கித் தமிழ்மறையின்னிசைதந்த வள்ளல், மூளுந்தவநெறிமூட்டிய நாதமுனி கழலே நாளுந்தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே’ என்றும் நந்தூப்புற்குலத்தரசு, பெரிதும் போற்றிநின்றது.

நாதமுனிகளுக்குப் பிறகு அவர் திருப்பேரரான ஆளவந்தார், அருளிச்செயலில் மிக விஞ்சின ஆதரத்துடனிருந்து, அவ்வார்த்தங்களையே அழகாகவமைத்து அம்புயத்தாள் கேள்வனுக்கென்று ஆக்கிய ‘ஆளவந்தார் ஸ்தோத்ரம்’ என்கிற ஓர் அநுபவபரீவாஹரூபமான ஸ்தோத்ராத்நத்தில் எம்பெருமானை வழிபடுவதற்கு முன்னே, அவனை ‘சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய் தந்தையும் அவரே யினியாவாரே’ என்றேத்திப் போந்த ஆழ்வாரிடத்து அளவிறந்த காதல்கொண்டு அவர் தன்னையே ‘அன்னையாயத்தனுயென்னையாண்டிடும் தன்மையான் சடகோபனென் நம்பியே’ என்ற ஸ்ரீமதுரகவிகளின் அநுபவமதுபோன்ற ஓர் அநுபவத்தை ‘மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் | ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||’ என்று பரமபக்தி பொலியப்பரவிநின்றார்.

இவ்வேற்றத்தையும் நம் வேதாந்தவாரியனார் ரஹஸ்யரக்ஷை என்கிற ஸ்தோத்ரரத்ந வ்யாக்யாநத்தில் இந்த ச்லோகத்திற்கு உரையிட உத்தேசிக்கையில், ‘ஸ்வ வாசாம ஸூ வாசாஸ்வபி வேதாந்தரஹஸ்யவேத்யாதி பரமேஹதா [illegible], ஸத்யம் வக்ஷ்யமாண [illegible], ஸர்வோபஜீவ்ய [illegible], ஸ்வயம்ப்ரகாசவிஷய [illegible]

ஸம்ப்ரதாய பரம்பரயா நாதமுநேர வ்யாவர்தகஸாரம் காலவிப்லவக்ஷேபவி வரிவஸ்யாஷஸம்ரக்ஷணாய ரக்ஷாவிக ப்ராதுர் பூதஸ்ய ஸாக்ஷாத்க்ருத ஸர்வதோவநிஷ்டா ஸ்ரீவைஷ்ணவ ஸம்ரக்ஷணைகதீக்ஷிதம், 'யாதா விதா ப்ராசேதஸ்ய ப்ரவர்தகவிஜயஸ்ய ஸூர்யஸ்ய ப்ரணமந்தி ஸந்தத' என்று வெகு உல்லாஸமாக உவந்தருளிச்செய்துநின்றார்.

ஆளவந்தாருக்குப்பின்னர் 'திருவாய்மொழியின் மணந்தரு மின்னிசைமன்னு மிடந்தொறும் புக்குநிற்கும் குணந்திகழ் கொண்டல்'னக் கூறும்படியுள்ள பெரும்பூதூர் வந்த வள்ளல் ஆளவந்தாரின் திருவுள்ளக்கருத்துக்கிசைந்தவண்ணமே, ஸதாசார்யன் பக்கல் திருவாய்மொழியை க்ரஹித்து திருக்குருகைப்பிரான்பிள்ளான்முகமாகத் திருவாய்மொழிக்குத் திருவாறுயிரப்படியையும் வெளியிடுவித்து மற்றும் ஆழ்வான் முதலான பல சிஷ்யர்களுக்கு அருள்புரிந்து அதிஸூக்ஷ்மார்த்தங்களையும் அநுபவப்ரகாரமான நிர்வாஹங்களையும் பரக்க உபதேசித்துப் பலபடியிலும் திருவாய்மொழியை வளர்த்தருளினர்.

எம்பெருமானர் திருவாய்மொழியை ஸதாசார்யன் பக்கலிலே உச்சாரண அநூச்சாரண முகத்தாலே அத்யயநம் செய்தபடியை 'ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியும் ஓதி' என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததும், 'மொய்ம்பால் தமிழ்மறைகளாயிரமும் வளர்த்த இதத்தாய்' என்று பட்டர் அருளிச்செய்ததும் அனைத்துலகு மறியநிற்குமன்றோ.

மேலும் இத்தமிழ்மறையை ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் முதலான பல மஹான்கள் வழியாகப் பரவும்படி பரமாநுக்ரஹம் செய்தபடியை எவ்வாறு பரவிப்போந்தால் பரவிநின்றதாகும். இவ்வண்ணமுள்ள பெருமைகளை நினைந்தே 'த்ராவிடோபநிஷத்ஸம் ப்ரவ்ருத்தம் ஸஹஸ்ரசாகம் யாமுநேய ப்ரபந்நைஸ் தாதம் ஸம்வர்த்திதைஸ் ஸ்ரீ உபயவிததமை: கலஸம்பந்நம் ...' என்றே உத்கோஷித்து நின்றார் நம் தேசிகனும்.

இப்படி எம்பெருமான்முதல்பற்பல ஆசார்யசிகாமணிகளால் இத்தமிழ்மறை தழைத்தோங்கி வளர்ந்துகொண்டிருக்கையிலேயே உலகை நலியநோக்கியேநிற்கிற கலிபுருஷனும் ஏதோ ஒருவகையால் 'ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜாயந்தே ப்ரஹ்மயோநிஷு' என்றும் 'சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர்வேதி ஸாத்விகை:' என்றும் பேசியுள்ளபடியே, உள்புகுந்து நலியவே 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥' என்று பேசின கண்ணனே 'கண்ணனடியிணை யெமக்குக் காட்டும் வெற்பு' என்கிற வேங்கடமாமலையில் 'கலௌ வேங்கடநாயக:' என்கிறபடியில் எழுந்தருளியிருக்கிறானுகாலே, அத்திருவேங்கடமுடையான் மிகவும் மனந்தளும்பி 'இப்பொழுது உலகிற்கு வந்திருக்கும் விபத்திற்கு நான் ஒருவனே தோன்றினல் போராது; வேங்கடேசனின் அவதாரமோ! அவனுடைய திருமணியாழ்வாரின் அவதாரமோ! திக்குற்றகீர்த்தி இராமாநுசனின் அவதாரமோ என்று பலபடியும் பாரிலுள்ளோர் பரவும்படி அவதரிக்கவேணும்' என்று பெரியபாரிப்புடன் புரட்டாசித் திருவோணத்தில் தூப்புலனந்தாரியனார் தொல்புகழ்சேர் மைந்தனாக அவதரித்தருளினன்.

இவருக்கு அவ்வவகாலத்தில் அத்தனாகிய அனந்தாரியரும் ஜாதகர்மாதிஸம்ஸ்காரங்களைக் குறையறச் செய்து போந்து, கிடாம்பியப்புள்ளாரிடம் குருகுலவாஸம் செய்ய அநுமதித்தனுப்பிவைக்க, அவர் தம்மருளால் ஸர்வஸாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரிக்கப்பெற்று 'யதிவரனார் மடைப்பள்ளி வந்தமணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே' என்று தாமும், 'காவலனெங்கள் கிடாம்பிக்குலபதியப்புளார் தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால் நாவலருந்தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பிக்காவல தூப்புற்குலத்தாமசே யெம்மைக் காத்தருளே' என்று குமாரவரதாரியர் முதலானவர்களும் கொண்டாடும்படியான ஏற்றம் பொலிந்து நின்றது.

இவ்வேதாந்ததேசிகன் தம்முடைய அநுபவபரீவாஹங்களை வடமொழி தென்மொழி க்ரந்தங்கள் முகமாக உலகுய்யச்செய்த செயல்கள் எண்ணிறந்தவை. இப்பெருமைகளையெல்லாம் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் ஸப்ததிரத்நமாலிகையில் உள்ளபடியே பேசி வெளியிட்டிருக்கிறார். அதனில் [illegible]' என்கிற ஒரு ச்லோகரத்நமே இந்த வ்யாஸத்தின் மங்களச்லோகத்துடன் கலந்துகொண்டு அநுபோக்தாக்களின் உள்ளத்தைக் குளிரச்செய்கிறது.

இதுவரை அநுபவித்துவந்தபடிகளிலும் தேசிகனுக்கு தமிழ்மறையினிடத்தும், அதனைக்கண்டு வெளியிட்ட ஆழ்வார்களிடத்தும் உள்ள ஈடுபாடு ஒரு வரம்பிட்டுப் பேசமுடியாததென்றே விளங்கினாலும் பின்னும் பல இடங்களில் உள்ள அநுபவங்களில் சிலவற்றையும் அநுபவங்கொண்டு அகமகிழ்வோம்.

அவைதான், *[illegible] *என்றும், அவர்களருளிய பாசுரங்களின் அர்த்தங்களையே *[illegible] *[illegible] *[illegible] *[illegible]

புவீஜந: *விசடதாஸஹஸ்ரஸம்ஹிதேஸங்க்ஷேபஸ்ரீ தமஜ்ஞாதபடுவேவரோந ஐவ யாவிவேணுஜ: என்றும் வடமொழியிலே அருளப்பட்டும், * இவ்வர்த்தத்தை அநுஷங்கஸித்தைச்வர்யரான ஸ்ரீகுலசேகரப்பெருமாளும்* ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணின ஆழ்வாரருளிச்செய்தார்* இத்தை மயர்வறமதிநல மருளப்பெற்று ‘ஜ்ஞாநஸ்ய ந: காலவேத:’ என்கிறபடியே ஸ்வவசஸ்தாநகத்விஸ்ராண நம்மாழ்வாரும் அருளிச்செய்தார் * நம்மாழ்வார் நாதமுனிகளுள்ளிட்டார்க்குப்போலே ஸாக்ஷாத்காராதிஷ்டேவங்கள் வந்தாலும் * க்ஷ்வஸ்துத்வ்யாவ்யாதாவான பெரியாழ்வாரருளிச்செய்தார். * வ்யாஸபோதாயநாதிகளாலே யதாயிகாரம் ஸ்வஸ்தமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ஸ்ரீஹநத்ர்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ஸ்வதகாரர். *இவ்வர்த்தத்தை சித்தரஞ்ஜனத்தோடே ஸர்வரையும் எளிதாகத்தெளிவிக்குமதில் பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல் ஸ்யாநம் * சுநதமான ஆராவமுதக்கடலிலே அநுபவியாத அம்சமில்லாதபடி சுமஹஸ்ரஸூவேஷியாலே சுநேத்ராநும் ஸோகதவ்ரான இருவரும் நிற்கிற நிலையைக் கண்டு *ஸம்ஸ்க்ருதத்ராவிடஸ்ருதி, ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களில் சொல்லுகிற *பேயபிழையும் புகுதருவாநின்றனவும் தீயினிற்றூசாகும் என்றும் உபநிஷத்து சொன்னபடியே *நாச்சியார் அருளிச்செய்கையாலும் *என்றெல்லாம் மணிப்ரவாளரூபமான க்ரந்தங்களில் அருளப்பட்டும், *பொய்கைமுனி......செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே *துன்பற்றமதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்வழிகள் *பண்ணமருந்தமிழ்வேதமறிந்த பகவர்களே *பாட்டுக்குரியபழையவர்மூவர் ..வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டும் இம்மெய்விளக்கே *அணிகுருகைநகர்முனிவர் நாவுக்கமைந்தன *மாலுகந்த வாசிரியர் வார்த்தை திருமால்தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே *பாண் பெருமாளருள்செய்த பாடல் பத்தும் *பாவளருந்தமிழ்மறையின் பயனே கொண்ட பாண்பெருமாள் பாடியதோர் பாடல்பத்தில் *நம்பாணன் ஓதியதோர் இருநான்கு மிரண்டுமான வொருபத்தும் பற்றாகவுணர்ந்துரைத்தோம்* தனித்திவம்சேர்ந்துதமருடனே.. .பாவளருந்தமிழ்ப்பல்லாண்டிசையொடும் பாடுவமே *குருகையில்வந்து கொழுப்படக்கிய குலபதி *நாலாயிரமுமடியோங்கள் வாழ்வே* என்றெல்லாம் தமிழ் ப்ரபந்தங்களிலே அருளப்பட்டும் இருப்பதால்தமக்குத் தமிழ்மறையினிடத்தும் அதனைக்கண்டு வெளியிட்ட ஆழ்வார்களிடத்துமுள்ள பரமபக்தியை நாடுநகரமும் நன்கறிய வெளிப்படுத்தியதோடு நில்லாமல், தம்மை ‘சந்தமிகுதமிழ்மறையோன் தூப்புற்கோன்றும் வேதாந்தகுரு’ என்று போற்றிப்பேசிக்கொண்ட பெருமையை எவ்வளவு பேசிப்போந்தாலும் எவ்விதத்திலும் முடிவு காணமுடியாது. இவருக்குத்தமிழ்மறையினிடத்திலுள்ள காதல், அதைக்கண்டு வெளியிட்ட ஆழ்வாருக்கு ஓராயிரம் இடச்செய்தது. தமிழ்மறைகாத்த தனித்தெய்வமான ஸ்ரீஆராவமுதாழ்வானுக்கு அவ்வாயிரத்தினிடையே நம்மாழ்வாரும் கலியனும் தம்ப்ரபந்தங்களினிடையே பலபாடல்களைப் பாடிவைத்தாற்போலே பல ச்லோகங்களையுமாங்காங்கு பதியவைத்தது. இவ்வாறெல்லாம் ஸ்ரீதேசிகனுக்குத்தமிழ்மறையிலுள்ளஈடுபாட்டை விரிவுக்கஞ்சி ஓர் சிறிதளவே விண்ணப்பிக்கப்பட்டது.

த்ரய்யந்தாசார்ய! ஸத்ஸ்வ
ஸ்வக்ஷாலஸஜாக்ஷரம் ஸதா!
ஸ்வயம் பிவ ஸுதா ஸம்ப்ரியாஸ
க்ருத்ஸ்ருஸ்வாஸம்வாஸ ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

"தம்பதீ தைவதம்"

[ஸ்ரீ. உப. வே. நரஸிம்ஹாசார்யர், காஞ்சீபுரம்.]

ஆசார்யர்கள் இருவகைப்படுவர்கள். அவர்களாகிறார் உபதேச முகத்தாலும் ப்ரபந்த முகத்தாலும் உபகரித்தவர்கள். இவ்விரு பெருமையும் ஒருங்கே சேரும் சில ஆசார்ய ச்ரேஷ்டர்களுக்கு. அப்படிப்பட்டவர்களில் ப்ரதானமாக விளங்குபவர் நம் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன். இவ்வாசார்யோத்தமன் நமக்கு உபதேச முகமாகவும் ப்ரபந்த முகமாகவும் மஹோபகாரம் செய்துள்ளார். இவர் செய்தருளிய ப்ரபந்தங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலும், தமிழ் பாஷையிலும், ப்ராக்ருதபாஷையிலும் நிறைந்துள்ளன. இவர் திருவவதரித்தத் திங்களில் நாம் செய்யுமது இவருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்து அநுபவித்து நம்காலத்தைப்போக்குவதுதான். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் நடத்திக் காட்டியதும் ஆசார்யர்களுடைய திவ்யஸூக்திகளின் அநுபவம்தான் என்று அவரது ஸ்ரீஸூக்திகளிலிருந்து நன்கு புலப்படுகிறது. ஆகையால் நாமும் செய்யவடுப்பது ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளின் ரஸத்தை அநுபவிப்பதுதான்.

ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்கு ஓர் தனிப்பெருமையுண்டு. ஒரே விஷயம் அநேக இடங்களிலேயோ அல்லது அநேக க்ரந்தங்களிலேயோ சொல்லப்பட்டாலும் ஏகரூபமாயும் முன்பின் முரண்பாடில்லாமலும் பூர்ணமாகவுமிருக்கும். இதனால்தான் விசத ஜ்ஞானவான்கள் ஸ்ரீ தேசிகன் க்ரந்தங்களை பூர்ணமாக ஸேவித்து எந்த அர்த்த நிச்சயத்தைச் செய்கிறார்களோ அதையே அல்ப மதிகளாயுள்ளவர்கள் ஒரே ப்ரபந்தத்தை ஸேவித்து தெரிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வொரு ப்ரபந்தத்திலும் ஒவ்வொரு விஷயமும் அதிகாரிகளுக் கநுகுணமாகப் பூர்ணமாக அமைந்திருக்கும். இத்தைக் கணிசித்தன்றோ ப்ராஜ்ஞர்கள்—

'சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்
ஓரொன்று தானே அமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு
வானேறப்போமளவும் வாழ்வு'

என்று தனியனிட்டார்கள்.

இப்போது ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திவ்ய ஸூக்திகளையிட்டு அம் மஹான் கண்டெடுத்த பரதேவதை யாது? என்று சற்று விசாரிப்போமாக. மோக்ஷத்தை அடையவேணும் என்று ஆசைப்படுகிற அதிகாரிக்கு பரதேவதா விசேஷநிச்சயம் ஏற்பட வேண்டியது அவச்யம். 'பரதேவதா விசேஷ நிர்ணயமில்லாதபோது 'உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாளவனையல்லால்' என்கிற பரமைகாந்தித்வம் கூடாமையாலும் பரமைகாந்திக்கல்லது வ்யவதாநரஹிதமாக மோக்ஷங் கிடையாமையாலும் ஈச்வரனின்ன தேவதா விசேஷமென்று நிஷ்கர்ஷிக்கவேணும்' என்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரதேவதாபாரமார்த்யாதிகார வாக்யம். இவ்வதிகாரத்தில் தேவதாந்தரங்களுக்கு கார்யத்வ கர்மத்வங்களை அநேக ப்ரமாண ஸம்ப்ரதாயங்களைக் கொண்டு ஸ்தாபித்து நன்னெழில் நாரணனுக்கு பரத்வத்தைத் திறமாகச்செப்பி 'தைத்திரீயத்தில் ஸ்ரிய:பதித்வஸித்தத்தாலே மஹாபுருஷனுக்கு வ்யாவ்ருத்தியோதினபடியை நினைத்து, 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்றுபக்ரமித்து 'சார்வுநமக்கு' என்கிற பாட்டிலே ப்ரதிபுத்தரான நமக்குப் பெரியபிராட்டியாருடனே யிருந்தென்று மொக்கப் பரிமாறுகிற விவனையொழிய ப்ராப்யாந்தரமும் சரண்யாந்தரமுமில்லை; இத்தம்பதிகளே ப்ராப்யரும் சரண்யருமென்று நிசமிக்கப்பட்டது' என்றருளியுள்ளார். ஆகையால் ஒருதிவ்ய தம்பதிகள்தான் நமக்கு ப்ராப்ய ப்ராபகர்களென்றாயிற்று. ஸ்ரீ பாஷ்யகாரரும்

.ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்றாரிறே. இவருக்கு மடப்பள்ளிவந்தமண மாகையால் இவர் ஸித்தாந்தமும் அப்படியேதானிருக்கு மிறே. ஆழ்வாரும் 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப கண்டசதிர் கண்டொழிந்தேன்' என்றும் 'நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து' என்றும் சொல்லுகிறபடி ஒரு மிதுநமே ப்ராப்யப்ராபகம் என்றருளினார். இதைத் திருவுள்ளம்பற்றி உபாயதசையிலும் வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யம் என்று அபியுக்தர் பேசினாரிறே.

இவ்வர்த்தம்தான் இந்த ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்திற்கு பரமதாத்பர்யம் என்பது இவ்வர்த்தத்தை முதலிலும் நடுவிலும் கடைசியிலும் ஸாதித்தருளுவதால் நன்கு ஏற்படுகிறது. ஓர் அர்த்தவிசேஷத்தை உபக்ரமத்திலும் மத்தியிலும் உபஸம்ஹாரத்திலும் சொன்னால் அதுதான் அந்த ப்ரபந்தத்தின் பரமதாத்பர்யம் என்று சாஸ்த்ரவேதிகள் சொல்லுகிறார்களல்லவா. அதுபோல் இந்த மிதுநம்தான் பரதேவதை என்கிறதை முதலில் 'ஶ்ரீமான் ஶ்ரீமந்நாராயணஸ்ஸ்வாமீ நவிஷ்வகல்யாணகுண ஸம்ஹிதஸ்ஸ ஸமஸ்த ஜகதாம் பதீ ॥' என்று ஜகத்துக்கெல்லாம் சேஷியாயும் பரமகாரணமாயுமுள்ள வஸ்து ஒரு திவ்யதம்பதிகள் என்றார். ஆழ்வானும் யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேऽகிலம்' என்று பிராட்டியின் கருத்து அறிந்து ஜகத்தின் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்கிறான் ஸர்வேச்வரன் என்கிறார். ஸ்ரீதேசிகனும் இங்கேயே 'ஜகதி விஹிதயா ஸாகம் தேவோ ஜகத் பரிபாலயந்' பிராட்டியுடன் கூட ஜகத்தை ரக்ஷணம் செய்கிறான் என்றருளுகிறார். இப்படி ஜகத்காரண வஸ்து ஒரு திவ்யதம்பதிகள் என்று ஸாதித்தார். முமுக்ஷுவான அதிகாரிக்கு உபாஸ்யமான வஸ்து ஜகத்காரணபூதமான வஸ்துதான் என்று சாரீரகசாஸ்த்ரத்தில் நிர்ணீதமிறே. 'காரணம் து த்யேய:' என்றது உபநிஷத்தும். ஆகையால் 'ஜகதாம் பதீ' என்று ஜகத்காரணவஸ்து ஒரு தம்பதிகள் என்றால் உபாஸ்யமும் ஓர் தம்பதிகள்தான் என்று ஏற்படுகிறது. இதை ஸாதிக்கும்போது 'ஶ்ரத்தயா ஸ்வாதி ஶேஷி ஜகதீ ஹரந்யாஸமஸ்மின் ஶிஷ்யதே' என்று சேஷிகளான தம்பதிகளிடத்தில் பரந்யாஸமானது உபாயமாக மிகுதியாகவிருக்கிறது என்கிறார். அந்த திவ்யதம்பதிகளின் கருணையை நம்மேல் வ்யாபிரிக்கப்பண்ணும்படி ஆசார்யாள் செய்கிறார்கள் என்கிறார் மற்றோரிடத்தில். இப்படி ஜகத்காரணமாயும் உபாஸ்யமாயும் உள்ளது ஒரு மிதுநம்தான் என்றருளிச்செய்து ப்ராப்யமும் அம்மிதுநம்தான் என்று ஸாதிக்கும்போது இந்த ப்ரபந்த கடைசியில் 'ஶேஷாயாஶேஷவித் ஶேஷிதம்பதி ப்ரியா தீக்ஷாதீக்ஷா தீக்ஷே' என்றருளிச்செய்து இந்த ப்ரபந்தத்தை 'திருமாலுக்குத் தித்திக்குமே' என்றும் 'ரஹஸ்யத்ரய ஸாரோயம் வேங்கடேஶவிபஶ்சிதா। ஶரண்ய தம்பதிப்ரீத்யை ஸமர்ப்பிதஸ்ஸ்வஹ்ருத ॥' என்றும் சொல்லுகிறபடி திவ்யதம்பதிகள் திருவடிகளில் ஸாத்விகத்யாகபுரஸ்ஸரமாக ஸமர்ப்பிக்கிறார்.

இதனால் ஸ்ரீஸ்வாமிதேசிகனுக்கு பிராட்டி மாத்திரமோ பெருமாள் மாத்திரமோ உத்தேச்யமில்லை என்பது நன்கு ஏற்படுகிறது. இதை ஸாதிக்கும்போது ஸ்ரீஸ்துதியில் 'கூவாவோஹம் கதிவிதவரோ கஶ்சிதயம் மொக நாயம் கிமெனொஸ: குலஹரிமநெ: கிஞ்சிதீயதேம: । கஸ்தம் வீதெ விஹாரிஹாரள ஸங்கவீ நா ஶ்ரீநாம ஹாவாரஜௌ ஹரவதி யஸ்வாம் தைவதம் தம்பதீ ந: ॥' என்கிறார். தேவதாந்தரபஜநத்தில் நின்றும் விலகி கொஞ்சம் உத்தீர்ணர்களாக எண்ணப்படவேண்டியபோதிலும் ச்ருதிகளின் பரமதாத்பர்யத்தை அறியாமல் உங்களைத் பற்றினபடியால் மக்நர்களானார்கள். பெருவெள்ளத்தில் முதலடியிலேயே முழுகினவர்களோடும் கொஞ்சம் உயரக்கிளம்பி முழுகினவர்களோடும் வாசியில்லையிறே. பிராட்டியை

விட்டு சக்ரவர்த்தித் திருமகனைப் பற்றினுள் சூர்ப்பனகை. காதும் மூக்கும் அறுபட்டுப் போனுள். பெருமாளைவிட்டு பிராட்டியைப் பற்றினுன் இராவணன். அனர்த்தப்பட்டு முடிந்துபோனுன். பெருமாள் காட்டிற்கு எழுந்தருளவேண்டியகாலத்தில் பிராட்டியுடன் சற்று ப்ரணயகலஹங்களை அநுவிக்கும்போது வெளியே நின்றுகொண்டிருந்த இளையபெருமாள் இம் மிதுநம் பிரிந்துபடாமல் நம்முடைய கைங்கர்யத்தை திருவுள்ளம் பற்றவேணுமே என்று மிகவும் பயந்தவராய் வாயிலில் நிற்க ப்ரணயகலஹம் ஒருவாறு முற்றுப்பெற்று அந்த திவ்ய தம்பதிகள் ஒன்றுசேர்ந்து வெளியே எழுந்தருளும்போது 'ஸஹ த்வராணள ஶாயம் நிவீய்ரவாநநு நஃ। ஸீதாஸவாவதியஶாஃ ரூவவஞு ஹோவ்தழ ॥' என்று அவர்களிருவரையும் பற்றினுர். 'ஹவாஂஷூ ஸஹ வைவெதெஹ்யா ஶிரிஸாநுஷு ரூஂஸ்யதெ। கஹஂ ஸவஂ கரிஷ்யாஜி ஜாஶ்தஃ ஸ்வபதஶ்செத॥' என்று தான் மநோரதித்தபடி ஸர்வவிதகைங்கர்யங்களையும் அந்த சேர்த்தியில் செய்யப் பெற்று உய்ந்துபோனுர்.

ஹம்ஸஸந்தேசத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் 'ஶ்யாஸக்ஷம் ஸரஸிஜஜிவ ஸ்வினுஶாய ஶைஶாநொ ஜெவ்யா ஹஷூஂ தஜிதரகரநுஷூஶீயாரவிநுஃ। ஜெவஶ்ஶ்ஶாநு ஸ யஜி விஹரெகஃ ஸெஷரஶோரூஶிஹெஶிள வ்யெக்தா வாஙவ்ஜநவஷா வீஜயெஷூஂ கவெஶெவ॥' என்கிருர். பெருமாளும் பிராட்டியும் திருமுற்றவெளியில் கைகோர்த்துக்கொண்டு உலாவுவார்கள். அப்போது அவ்வெம்பெருமானுக்கு மிகவும் திருவுள்ளமுகந்த திருஆலவட்ட கைங்கர்யத்தைச் செய்து உன் ஆத்மாவை தந்யமாக்கிக்கொள். இந்த சேர்த்தியில் கைங்கர்யம் செய்வதற்கு 'உள்ளமுரைசெயல் உள்ள இம்மூன்றையும்' என்கிறபடி ஒரு கரணம் தேடிப் போகவேண்டாதபடி பண்டே ஸம்பந்தமாயுள்ள உன் விசிறி போன்ற சரீரம் உள்ளது. அதனுல் விசிறி பரமபுருஷார்த்தத்தை அடைவாய் என்கிருர். 'ஶெக்ஷீவிஜ்யஷீவிதவஷம்' என்கிருர். இப்ரகாரணம் ஸ்ரீதேவாதிராஜன் ஸந்நிதியில் வெள்ளிக்கிழமை சேர்ந்த பஞ்சபர்வ புறப்பாடுகளைப் பற்றித்தான் அருளியிருக்கவேணும் என்று தோன்றுகிறது. இரட்டைப் புறப்பாடு என்ருல் ஒரு பெரிய மஹோத்ஸவம்தான் ஸ்ரீபேரருளாளன் ஸந்நிதியில். இரட்டைப் புறப்பாடன்று திருமுற்றவெளியில் பிராட்டியுடன் உலாவுவதுதான் அந்த உத்ஸவத்தின் அங்கி. இதை அநுபவித்த ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி அவாப்தஸமஸ்தகாமனுக்கல்லது இப்படிப்பட்ட ஸூஹூநுவிஹாரூஂ வடியாது என்றருளியபடி. மேலும் திவ்யதம்பதிகள் சேர்ந்து ஸேவைஸாதிக்கும் ப்ரகாரங்கள் பல உள. நவராத்ரி என்ன தெப்போத்ஸவம் என்ன தவனேத்ஸவம் என்ன இது முதலான அநேக உத்ஸவங்களில் பெருமாளும் பிராட்டியும் சேர்ந்து ஸேவை ஸாதிப்பது வழக்கம். நவராத்ரி உத்ஸவத்தில் திவ்ய தம்பதிகள் உள்ளே எழுந்தருளி அபிஷேகமண்டபத்தில் ஏறி கீழே குழுமியிருக்கும் அடியார்களைத் திரும்பி கடாக்ஷித்தவண்ணம் உள்ளே எழுந்தருளுகிற வழக்கம். அப்போது அந்த நாலடி உள்ளே எழுந்தருள குறைந்தது அரைமணி அவகாசம் பிடிக்கும். அடியார்கள் சிரஸ்ஸின் மேல் கைகுவித்தபடியே தம்பதிகளைஸேவித்து நிற்பர்கள். திவ்யதம்பதிகளும் இவர்களைவிட்டு உள்ளே எழுந்தருள மனமிராமல் அப்படியே நின்றவண்ணமிருப்பர்கள். திருமழிசைப்பிரான் 'நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே நீ என்னையன்றி யிலே' என்றருளினபடி ஒருவரை ஒருவர் பிரிய மனமில்லாமல் பிரிந்தால் ஸத்தைக்கு ஹாநி ஏற்படுமோ என்று சொல்லும்படி நிற்பர்கள். பிறகு திருத்திரை சேர்க்கப்படும். இங்கு ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி அழகாக பணிக்கும்படி இந்த மணியகாரர் ஸ்வாமி திரை சேர்க்காவிடில் காலதத்வமுள்ளளவும் இந்த சேர்த்திக்கு முடிவு ஏற்படாதென்று.

ஸ்ரீஸ்வாமி தேசிகன் இந்த மாதிரியான திவ்யதம்பதிகளின் ஸேவையில் ஈடுபட்டு அப்படியே வெகுகாலம் அநுபவிக்கப்பெற்றபடியால் 'வெகுணவாஸெzவி நஶெ ஶிஶாஷ்ஃ'

என்று ஶபதம் செய்தாரிறே. 'கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச்செய்யும் தவந்தானென்' என்று நாய்ச்சியாரும் 'யயா த்வம் வ்ருக்ஷ வ்யாஜ்ய் ஶாகோத்ர: ஶோகாஸிகுஶிலைத:। ஸஸ்ருஸ்யம் ஸகாபேஶஹம் தயா கஞ்ஜா உயாம் உயி' என்று பிராட்டியும் மநோரதித்தபடி நாமும் இந்த லோகத்தில் இந்த திவ்யதம்பதிகளின் ஸேவையை அநுபவிக்கவன்றோ தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தைக் கோலினது. இப்படி நம்தூப்புல்வேதாந்தார்யன் கண்டதெய்வமானது ஒரு திவ்யதம்பதிகள் என்று அவருடைய ஸ்ரீஸூக்திகளில் நின்றும் நன்கு ஏற்படுகிறபடியால் அந்த திவ்யதம்பதிகளே நமக்கு ப்ராப்யப்ராபகர்கள் என்றறுதியிடலாயிற்று. இப்படி ஸ்ரீஸ்வாமி தேசிகன் திருவுள்ளம்பற்றின அர்த்தசேஷத்தை எம்பெருமானும் திருவுள்ளம்பற்றினன் என்பதற்கறிகுறியாக நடந்த ஸம்பவமும் ஒன்று உண்டு. ஸ்ரீதேசிகனின் அபராவதாரம் என்று சொல்லலாம்படியான ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் முதலில் அஹோபிலத்திலுள்ள ஸ்ரீந்ருஸிம்ஹனின் நியமனப்ரகாரம் ஒன்பது ந்ருஸிம்ஹன்களை ஆராதித்து பிறகு தாம் சேதநர்களுடைய ரக்ஷணார்த்தமாக ஒவ்வொரு தேசமும் எழுந்தருளும்போது தமக்கு ஆராத்யதேவதையாக ஓர் ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொள்வதற்காக அங்கு ப்ரார்த்தித்து நிற்க அப்போது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீஸ்வாமிகையில் எழுந்தருளினர் என்பது ஸுப்ரஸித்தம். சக்ரவர்த்தித்திருமகனுக்கு ஜங்கமபரிஜாதம் என்று பெயரிட்டார் ஸ்ரீதேசிகன். அது விபவாவதாரத்தில். அர்ச்சையில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனே ஜங்கமபரிஜாதம் என்னக் குறைவில்லையிறே. திவ்யதம்பதிகளாக ஒவ்வொரு க்ருஹத்திற்கும் எழுந்தருளி அங்கிருக்கும் சேதநர்களை ரக்ஷிப்பது இதொரு அர்ச்சையிலேதானல்லவா.

சக்ரவர்த்தித் திருமகன் 'விதரம் ரோவயாரோவ' என்கிறபடி தான் யாருக்குப் பிள்ளையாகப் பிறப்பது என்று யோசித்து தசரதரை இச்சித்தாப்போலே இவ்வாசார்யர்களிருவரும் தாங்கள் எந்த மாதத்தில் பிறப்பது என்று யோசித்து புரட்டாசி மாதத்தை திருவுள்ளம்பற்றினர்கள். இதின் ரஹஸ்யத்தை ஆராயப்புக்கால் நவராத்ரி என்கிற வ்யாஜத்தையிட்டு திவ்யதம்பதிகள் சேர்ந்து மஹோத்ஸவம் கண்டருளும் திங்களாகையால் தாங்கள் இத்திங்களில் பிறந்தால் தாங்கள் பிறந்து அறுதியிடப்போகிற திவ்யதம்பதிகள் தான் நமக்கு ப்ராப்யப்ராபகர்கள் என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை ஶாஸ்த்ரம் கொண்டு ஸ்தாபிக்கவேண்டாதபடி ப்ரத்யக்ஷமாக எல்லோரையும் நேரில் அநுபவிக்கச்செய்து திவ்யதம்பதிகள்தான் பரதேவதை என்று அவர்களை அறுதியிடும்படி செய்யலாம் என்கிற திருவுள்ளமாகத்தானிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

இப்படி மஹோபகாரம் செய்தருளின பரமாசார்யரான நம் தூப்புல் வேங்கடநாதன் திறத்து நாம் செய்வதொன்றுமில்லை. அவர் பண்ணின மஹோபகாரத்தை நினைந்து நைந்து 'என்னைத் தீமனங்கெடுத்தாய் உனக்கென்செய்கேன்' என்கிறபடி நித்யருணியாய் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டும் அவர் அருளிச்செய்த அர்த்தவிசேஷங்களின் சீர்மையை ஸதா த்யாநித்துக்கொண்டும் அவருடைய குணாநுபவங்களை பண்ணிக்கொண்டும் 'ஶ்ருத்வா ஶ்ருத்வாபி நித்யம் யதீயசரணௌ ஶரணம் ஶ்ரீயே' என்கிறபடி இங்குமங்கும் நம் தூப்புல் பிள்ளைபாதத்தை நம் சென்னிமேல் கொள்ளுவதுதான் நாம் அவர் திறத்தில் செய்யவடுப்பது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

தேசிக தீபாவளி

[ஸ்ரீ. உப. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், சென்னை.]

ஸ்வாமி தேசிகன் போர உகந்தருளின திவ்யதேசமாகிய அயிந்தைமாநகரில் இவ்வருஷத்திய அவ்வாசார்யோத்தமனது வர்ஷோத்ஸவ அங்குரார்ப்பண தினமாகிய புரட்டாசி மீ 14 உ (30-9-1951) ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 7-மணிக்கு 'தேசிகன் திருமாளிகை' என்று புகழப்பெற்ற மண்டபவிசேஷத்தில் ஓராயிரம் மின்சார விளக்குகள் ஏற்றப்பட்டன. இத்திருப்பணி 'தேசிகதர்சன ரத்ந தீபம்' என்று உயர் பிருதாலங்க்ருத உத்தமர் ஸ்ரீமான் உப. ஸ்ரீநிவாஸஐயங்கார் ஸ்வாமியால்தான் நிறைவேறியது என்பது அனைவருக்கும் சொல்லாமலே விளங்கும். சென்ற முப்பது வர்ஷகாலமாக தேசிகதர்சனம் பெற்ற பெருமைகளெல்லாம் இவர் தேசிக பக்தியுடையவும், விசாலஹ்ருதயத்துடையவும், விடாமுயற்சியுடையவும், ராஸிக்யபூர்த்தியுடைய மேதா விலாஸத்துடையவும் விளைவுகள் என்பது உலகமறியும். கடந்த விபவ ஸம்வத்ஸரத்தில் (1928) திருவஹீந்திரபுரத்தில் நடந்தேறிய விபவோத்ஸவத்தையும், அதற்குப் பத்து வருஷங்களுக்குப் பிறகு வெகுதான்ய ஆவணி ஹஸ்தத்தில் நடந்தேறிய ராமானுஜதயாபாத்ரமஹோத்ஸவத்தையும் காணப்பெற்ற இருநிலத்தார்க்கு இமையவரும் நேரාகார். அந்த ரத்ன தீபத்தின் ஒளி ஒன்று நூறாயிரமாகி தேசிக தீபாவளியொன்றை தேசிகன் திருவிழாவுக்கு முன் ஒரு தனி விழாவாகக் கொண்டாடி தேசிக பக்தர்களை இன்புறச் செய்தது.

விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள் வளக்காதல் கொண்டுறை மார்பனாகிய திருவேங்கடமுடையான் ஒரு புகழ் தூப்புல் குல விளக்காய், விளக்கொளி யெம்பெருமான் (தீபப்ரகாசன்) பொலிந்து நிற்கும் திவ்யதேசமாகிய திருத்தண்காவினருகே தோன்றி, ஆயிரக்கணக்கான அடியார்கள் உள்ளத்தில் அழியா எழில் ஞான விளக்கேற்றி வைத்தருளிய பெருமைக்கு ஒரு அறிகுறி இம்மஹோத்ஸவம் என்று பல ரஸிகர்கள் வியந்தனர். உபயவேதாந்த தர்சநம் விளக்கொளியாலேயே உலகம் பெற்றது. மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்திரித்து அன்று பொய்கைப்பிரான் எரித்த திருவிளக்கால் வருத்தும் புறவிருள் மாய்ந்து, இறைவனைக்காணும் இதயத்திருள் பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானமென்னும் நிறைவிளக்கால் நீங்கி, இப்படி உள்ளும் புறமும் மன்னிய பேரிருள் மாண்டபின் மாமலராள் தன்னோடு மாயன் உலகோர்க்குப் புலனானன். 'இருள் செக எமக்கோர் இன்னொளி விளக்கு' என்று தேசிகோத்தமனால் புகழப்பெற்ற பெரிய பிராட்டியார் ப்ரகாசமும் அன்றே உலகில் நிலவியது. அது வரையில்லாத முறையில் ஒரு திருமால் தான் பரதத்வம் என உலகம் உணர்ந்தது. இதை எண்ணியே 'தீபஸ்த்வமேவ ஜகதாம் தயிதாருசிஸ்தே' என்றும், 'நாட்டுக்கிருள் செக நான்மறையந்தி நடை விளங்க வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டு மிம் மெய் விளக்கே' என்றும் தேசிகன் பாசுரமிட்டருளியது.

இப்படித் தோன்றிய ஸித்தாந்தம் தான் அகிலதம:கர்சனமான உபயவேதாந்த தர்சனமாகியது. அதைச் சார்ந்த ஆசார்யர்கள் புரிந்த உபகாரம்

"மருளற்ற தேசிகர் வானுகப் பாலிந்த
வையமெல்லாம்
இருளற்று இறைவனிணையடிபூண்டுய்ய
வெண்ணுதலால்
தெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச்
சிறந்தவர் பால்
அருளுற்ற சிந்தையினால் அழியா விளக்
கேற்றினரே"

என்பதே.

நாதமுனிகள் தொடக்கமான அஸ்மத்தேசிகஸம்ப்ரதாயத்தைச்சார்ந்த ஆசார்யர்களின்

பெருமைகளெல்லாம் விளங்குவது ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செயல்களிலேயாதலால் அவர்கள் ஒளியெல்லாம் இவ்வாசார்ய வள்ளல் மேல் வீசவும் இவர் பேரொளியால் அவர்களெல்லாம் ப்ரகாசிக்கவும் இப்படி ஒரு அநுபவம் விலக்ஷணமான முறையிலே நமக்கு வாய்த்திருக்கிறது. இதுதான் தேசிக தீபாவளி. தேசிகர்களின் (ஆசார்யர்களின்) தீபவரிசை. தேசிகன் (நிகமாந்தமஹாதேசிகன்) ஏற்றிய தீபவரிசை. இந்த உண்மைகளையெல்லாம் அன்று (30-9-51) பலர் கண்கூடாகக் கண்டனர். அயிந்தைமாநகரில் அமைந்த தேசிகன் திருமாளிகையில் ஏற்றப்பட்ட ஆயிரம் திருவிளக்கால்.

வாழியணிதூப்புல் வரு நிகமாந்தாசாரியன்.

———

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர-ஹூ-கார்த்திகைமீ 1951-ஹூ-நவம்பர்--டிஸம்பர்மீ

[தக்ஷிணாயனம்- சரத்ருது--வ்ருச்சிகமீ]

17—11—51	1உ	சனிக்கிழமை	...	வ்ருச்சிக க்ருஷ்ண சதுர்த்தி திதி.
25—11—51	9உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
28—11—51	12உ	புதன்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை.
1—12—51	15உ	சனிக்கிழமை	...	பூராடம் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் தேவனார்விளாகம் ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமாஹ தேசிகன் திருநக்ஷத்ரம்.
2—12—51	16உ	ஞாயிற்றுக்கிழமை	...	உத்திராடம் ஸ்ரீ அஹோபிலமடம் 34-வது பட்டம் அத்திப்பட்டுஸ்ரீசடகோபராமாநுஜயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
6—12—51	20உ	வியாழக்கிழமை	...	அஷ்டமி-நவமி திதித்வயம்.
7—12—51	21உ	வெள்ளிக்கிழமை	...	தசமி திதி.
8—12—51	22உ	சனிக்கிழமை	...	ஏகாதசி திதி.
9—12—51	23உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ கைசிகஏகாதசி. த்வாதசி திதி
10—12—51	24உ	திங்கட்கிழமை	...	த்ரயோதசி திதி.
11—12—51	25உ	செவ்வாய்க்கிழமை	...	சதுர்த்தசி திதி. திருமங்கைமன்னன் திருநக்ஷத்ரம்.
12—12—51	26உ	புதன்கிழமை	...	அதிதி.
13—12—51	27உ	வியாழக்கிழமை	...	திருக்கார்த்திகை பௌர்ணமி திதி ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம்.
15—12—51	29உ	சனிக்கிழமை	...	வ்ருச்சிக க்ருஷ்ணத்விதீயை திதி.
16—12—51	1உ	ஞாயிற்றுக்கிழமை	...	சாபரவி 1-1- சாபக்ருஷ்ண த்ருதீயை திதி. தநுர்மாஸாரம்பம் (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிகன் ஜாதகம்

[ஸ்வாமி தேசிகனின் ஜாதகத்தை ஜ்யோதிச்ஶாஸ்த்ரப்படி லக்ன ஸ்புடம் முதலியவை செய்து கணித்து விபரமாக ஸ்ரீ.உப. இளநகர், ஸ்ரீசைலதாதாசார்யர் ஸ்வாமி ஒரு வ்யாஸம் நமக்கு எழுதியனுப்பியுள்ளார். அதிலுள்ள விஷயங்கள் ஜ்யோதிச்ஶாஸ்த்ரத்தில் நல்ல பரிசயமுள்ளவர்களுக்கு மட்டுமே புரியுமாதலால் அவ் வியாஸத்தை அப்படியே ப்ரசுரிக்கமுடியாமலிருப்பதற்கு வருந்துகிறோம். அந்த ஸ்வாமி ஜ்யோதிஷ ஸித்தாந்தப்படி கணித்த ஸ்ரீதேசிகனது ஜாதகம்மட்டும் கீழே வெளியிடப்படுகிறது. ... ... — ஸம்பாதகர்]

ஸ்வஸ்தி ஸ்ரீ கத கலி 4370-ஷு சுக்ல-வர்ஷம் புரட்டாசி-மாஸம் 11-உ ஞாயிற்றுக் கிழமை சுக்ல ஏகாதசி 6-நாழிகை 19-விநாடி. திருவோணம் 11-நாழிகை 28-விநாடி கூடிய சுபதினத்தில் உதயத்தில் திருவவதாரம்.

தத்கால க்ரஹநிலை.

ஸூர்யன்	—	ஹஸ்தம்-1ம் பாதத்தில்
சந்த்ரன்	—	திருவோணம் -4 ,,
செவ்வாய்	—	ஸ்வாதி -4 ,,
புதன்	—	ஹஸ்தம் -4 ,,
குரு	—	,, -3 ,,
சுக்ரன்	—	உத்திரம் -1 ,,
சனி	—	ஆயில்யம் -2 ,,
ராகு	—	பூராடம் -2 ,,
கேது	—	திருவாதிரை -4 ,,

(லக்னம் ஹஸ்தம்-1ல்)

ராசி சக்ரம்

			கேது
	ராசி		சனி
சந்த்ரன்			சுக்ரன்
ராகு		செவ்வாய்	ஸூ கு ல பு

நவாம்சம்

கேது செவ்	ஸூ ல		குரு
	நவாம்சம்		சந் புதன்
சனி			
சுக்			ராகு

சந்த்ரமஹா தசையில் இருப்பு 9-ஷு 11-மீ - நாள்கள் 17.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

மாதுங்கா பம்பாய் ஸ்ரீ க்ருஷ்ணஜயந்தி உத்ஸவம்

'ஸ்ரீ ராம்பாக்' மாளிகையின் மேல்மாடிகளில் ஷை உத்ஸவம் ஏழுதினங்கள் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. பால்போன்ற வெண்மையான ஸலவைக் கல்லால் பாலக்ருஷ்ண விக்ரஹம்; கோபாலக்ருஷ்ண விக்ரஹம், பகவத்ராமாநுஜ, தேசிகன் படம், ஸாளக்ராமம் இவர்களை திவ்யமணிமண்டபத்தில் ஏள்ளப்பண்ணி ப்ரதிதினம் அபரிமிதமான புஷ்பாலங்காரங்களோடு திருவாராதனம், அர்ச்சனை செய்யப்பட்டு வந்தது. பால, ஸ்த்ரீ, புருஷ ஸேவார்த்திகள் இந்த ஏழு தினங்களில் ஸதா வந்து பகவானை ஸேவித்து ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு போனார்கள். இந்த ஏழு நாட்களும் ஸாம, யஜுர் வேத பாராயணமும், பாகவத ஸப்தாஹ பாராயணமும் நடந்தது.

ஆவணி மாதம் 9–ந்தேதி (25–8–51) காலை ஸஹஸ்ரநாம லக்ஷார்ச்சனை, த்ரமிடவேத ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்தும் உத்ஸவம் ஆரம்பமாயிற்று. ராத்ரிவேளையில் கீழ்குறிப்பிட்டபடி உபந்யாஸங்கள் மிகவும் அழகாக நடந்தது. அதாவது;–

ஆவணிமீ		உபந்யாஸம்	உபந்யாஸகர்
25–8–51	... 9உ	(1) ஸ்ரீ க்ருஷ்ணவதாரம் ...	ஸ்ரீ வடுவூர், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி.
		(2) ஸமூக சீர்திருத்தம் ...	ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி. (பம்பாய் இன்கம்டாக்ஸ்-அப்பலேட்-ட்ரிபுனல் ரிஜிஸ்ட்ரார்)
26–8–51	...10உ	ஸ்ரீ க்ருஷ்ணசரிதம் ...	ஸ்ரீ ஆசார்யர், வெங்கடேச்வரதீக்ஷிதர்.
27–8–51	...11உ	(1) ஸ்ரீ பகவத்கீதா மாஹாத்ம்யம் ...	ஸ்ரீஜத், S.K. பெடில் (பம்பாய் நகர மேயர்.)
		(2) ஸ்ரீ ராமக்ருஷ்ணபரமஹம்ஸரின் க்ருஷ்ணநுபவம் ...	ஸ்ரீ T.V. ராமானுஜம் M. A. (பம்பாய் ட்ரான்ஸ்போர்ட் ஸெக்ரட்ரி)
28–8–51	...12உ	ஸ்ரீக்ருஷ்ணன் உத்தவருக்குச்செய்த உபதேசம் ... [பாகவதம் 11-வது ஸ்க]	ஸ்ரீ V. H. காமத் M..A.L.L.B. வக்கீல்.
29–8–51	...13உ	ஸ்ரீ பகவத்கீதையுபதேசிக்கவே க்ருஷ்ணவதாரமெடுத்தது ...	ஸ்ரீ தஞ்சாவூர், ஸாரம், ரங்காசார்ய ஸ்வாமி
30–8–51	...14உ	ஸ்ரீ கீதையின் உட்கருத்து ...	ஸ்ரீப்ரஹ்மஸ்வரூப பூரி M. A. L. L. B.
31–8–51	...15உ	பாகவதபக்தர் லக்ஷணம் ...	ஸ்ரீ கோபாலாசார்யர் M. A. (பம்பாய் மத்வாசார்யமடத்து ப்ரதிநிதி)

ஸபாத்யக்ஷர் ஸ்ரீ A. S. ஐயங்கார் யாத்ரைபோயிருப்பதால் உபாத்யக்ஷர் ஸ்ரீரகுநாதபாட்ராசார்யர்ஸ்வாமி உத்ஸவத்தை மிகவும் உத்ஸாஹத்துடன் நடத்திவைத்தார். இவருக்குஸஹாயமாகஇருந்தஸ்ரீ M. T. ஸுந்தரம் ஐயங்கார், மாத்தூர் பார்த்தஸாரதிஐயங்கார், மாத்தூர் தேசிகாசார்யர், ஸெகரட்ரிகள் V. K. வாஸுதேவன், N. கேசவன், மாதவன், சக்ரவர்த்தி, பார்த்தஸாரதி, சௌரி, C. க்ருஷ்ணன், A. ஸ்ரீநிவாஸன் முதலியவர்களுக்கு எங்களுடைய க்ரதஜ்ஞதையை தெரிவித்துக்கொள்ளுகிறோம். கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு விசேஷஸம்பாவனை செய்யப்பட்டது.

கார்யதர்சிகள் V. K. வாஸுதேவன், N. கேசவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

இன்னும் சில மாதங்களில் நடக்கப்போகும் தேர்தலைப்பற்றியே இப்போது எங்கும் பேச்சாக இருக்கிறது. தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற நாட்டிலுள்ள பற்பல அரசியல் கக்ஷிகள் திட்டம் போட்டுவருகின்றன. தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் என்னென்ன சாதித்துவிடப் போகிறோமென்பதைப் பற்றி அந்தந்தக் கக்ஷிகளின் தலைவர்கள் பொதுஜனங்களுக்கு எடுத்துக்கூற ஆரம்பித்திருக்கின்றனர்.

தேர்தலும் தேறுதலும்

தான் சாதித்துவிடப் போவதாகச் சொல்லும் காரியங்களை ஒவ்வொரு கக்ஷியும் அதிகாரத்திற்கு வந்த பிறகு எவ்வளவு தூரம் நிறைவேற்ற முயலுமென்பது வேறு விஷயம். இப்போது அதிகாரத்துக்கு வந்துவிட்டால் ஐந்து வருஷங்கள் வரையில் யாரும் அசைக்கமுடியாது. ஜனங்கள் எவ்வளவு வெறுத்தாலும் சட்டஸபைகளிலுள்ளவர்களில் பெரும்பாலோரின் பக்கபலம் உள்ளவரையில் யதேச்சையாக அதிகாரத்தை நடத்திக்கொண்டு போகலாம். தற்போது காங்கிரஸ் கக்ஷி நடத்திவரும் ஆட்சியிலிருந்து இவ்வுண்மையை நாம் உணரலாம்.

நம்மால் தேர்ந்தெடுக்கப்படப்போகிறவர்களுக்கு அளவு கடந்த அதிகாரம் ஏற்படப்போகிறது என்பதைத் தெரிந்துகொண்டால் அவ்வதிகாரத்தை தர்மவிருத்தமான வழியில் பரஹிம்ஸார்த்தமாகவும் ஸ்வப்ரயோஜனார்த்தமாகவும் துர்விநியோகம் செய்யாதவர்களையே நாம் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது தெளிவாகும். எனவே பல வழிகளிலும் சிறந்த யோக்யதையை உடையவர்களையே தேர்ந்தெடுக்கவேண்டியது அவசியமாகிறது. ஸகல ஜனங்களின் லௌகிக வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உண்மையாகப் பாடுபடுபவராயிருக்கவேண்டுமென்பது ஒரு முக்ய யோக்யதை. அத்துடன் இன்னும் முக்யமாக நாம் குறிப்பிடவேண்டிய யோக்யதை ஒன்றுண்டு. அதுதான் தர்மஸம்ரக்ஷணத்தில் அவர்கள் காட்டவேண்டிய சிரத்தையும் பஹுமானமும். நம்மால் தேர்ந்தெடுக்கப்படுமவர்கள் நம் ப்ராசீந தர்மஸம்ரக்ஷணத்திற்கு அநுகூலர்களாயிருக்கவேண்டும். அது ஸாத்யமில்லாவிட்டால் நமது தர்மாநுஷ்டானத்திற்கு அவர்கள் ப்ரதிகூலர்களாயில்லாமலிருக்கவேண்டியது மிக முக்கியம்.

இதுவரையில் உருவாகியிருக்கும் பற்பல கக்ஷிகளும் அவற்றின் தலைவர்களும் நம் பாரத தேசத்தின் ப்ராசீந தர்மங்களையும் ஆசார அநுஷ்டாநங்களையும், ஸித்தாந்தங்கள் ஸம்ப்ரதாயங்கள் இவைகளையும் பற்றி எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பது நாமெல்லாரும் அறிந்ததே. சுருங்கச்சொல்லில் அவர்களுக்கு அவைகளில் போதிய சிரத்தையோ, விச்வாஸமோ, பஹுமானமோ கிடையாது. சிலருக்கு நமது ஶாஸ்த்ரங்களும் ஸம்ப்ரதாயங்களும் 'மூடபக்தியா'லேற்பட்டவையென்ற ஒரு அலக்ஷ்யதாபுத்தி. எஞ்சியுள்ளவர்கள் சீர்திருத்தவாதிகள். அதாவது நமது ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயாதிகள் காலதேசாதிகளுக்கநுகுணமாக சீர்திருத்தப்படவேண்டியவையென்ற தீவ்ரமான அபிப்ராயம் கொண்டவர்கள். சீர்திருத்தம் என்று சொல்லிக்கொண்டு அவைகளை உருத்தெரியாமல் சிதைப்பதே இவர்களின் நோக்கம். இத்தகைய மனப்

பான்மையுள்ளவர்களை நாம் தேர்ந்தெடுத்தால் நம் தர்மமார்க்கத்தைப் பாழ்படுத்தக்கூடிய சட்டதிட்டங்களை இவர்கள் செய்யாமலிருப்பார்களென்று நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும்? தற்போதைய இந்திய அரசியல் சட்டம் மதச்சார்பற்றது என்றிருக்கச்செய்தேயும் இதுவரையில் காங்கிரஸ் ஸர்க்கார் ஜனங்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்தியும் மதப்பற்றுள்ளவர்களின் பலத்த ஆக்ஷேபங்களைப் புறக்கணித்தும் சட்டங்களியற்றிவருவதை நாம் பார்த்து வருகிறோம். இப்போது தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வரப்போகிற,வர்கள் என்னென்ன விபரீதங்களைச் செய்யப்போகிறார்களோ! ஸர்வேச்வரனே அறிவன். ஆஸ்திக்யம் க்ஷீணித்து நாஸ்திக்யம் விஷம் போல் பரவிவரும் இக் கலியில் ஆஸ்திகர்கள் தனியாக ஒரு ப்ரபலமான கக்ஷியை ஏற்படுத்தி பெருவாரியான ஸ்தானங்களைக் கைப்பற்றுவதென்பது எவ்விதத்திலும் அசக்யம். (அப்படி நேர்ந்துவிட்டால் ஸகல லோக க்ஷேமமேற்பட்டு தர்மாபிவ்ருத்தி உண்டாகி க்ருதயுகம் போலாகி கலியின் கொடுங்கோல் நீங்கிவிடுமாகையால் யுகாநுகுணமாக ஸங்கல்பிக்கும் ஈச்வரன் அப்படி ஸங்கல்பித்திருக்கமாட்டான்.) மேலும் தங்கள் ஆத்மீக வாழ்விற்கே போது போதாமலிருக்கும் ஆஸ்திக சிரேஷ்டர்கள் அரசியலில் ஈடுபட்டு வீணே போது போக்குவதும் விரும்பத்தக்கதில்லை. தனிப்பட்ட சில அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுத்து சட்டஸபைகளுக்கு அனுப்பிவைத்தாலும் அதனால் அதிகப்ரயோஜனமேற்படப்போவதில்லை. பலம் பொருந்திய கக்ஷி அரசாங்கம் கொண்டு வரும் மதவிரோதமான சட்டங்களை எதிர்த்து ஆஸ்திகப் பிரதிநிதிகள் பேசும் பேச்சுக்கள் செவிடன் காதிலூதிய சங்கைப்போல நிஷ்பலமாய்த்தான் போகும்.

இந்த ஸ்திதியில் தேர்தலில் 'வோட்' செய்ய உரிமையுள்ள ஒவ்வொரு ஆஸ்திகரின் கடமை என்ன? 'மதாசாரங்களையும் அநுஷ்டானங்களையும் பாதிக்கும் சட்டங்களை இயற்றுவதில்லை; இயற்றுவதற்கு உடந்தையாயுமிருப்பதில்லை; தற்போது அப்படி பாதகமாயிருக்கும் சட்டதிட்டங்களையும் நீக்கிவிட முயற்சிக்கிறோம்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொடுப்பவர்களுக்கே 'வோட்' கொடுக்கப்படுமென்று தெளிவாகச் சொல்லிவிடவேண்டும். தங்கள் தொகுதியில் நிற்கும் அபேக்ஷகர் யாரும் அத்தகைய வாக்குறுதியைக் கொடுக்க இசையாவிடில் தங்கள் 'வோட்டை' உபயோகிக்காமலிருப்பதே நலம். உண்மை ஆஸ்திகர்கள் வெகு சிலரேயாகையால் அவர்கள் தங்கள் 'வோட்டு'களைப் போடாமலிருந்துவிட்டால் ஆஸ்திக்யத்தின் விரோதிகளை அதிகாரத்துக்கு வருவதிலிருந்து தடுத்துவிடமுடியாதென்பது வாஸ்தவமே; இருந்தாலும் ஆஸ்திகர்கள் தங்கள் அஸம்மதியையும் எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்ள வேறு எவ்வித வழியுமில்லை. ஆஸ்திகர்கள் 'வோட்' செய்தாலும் செய்யாவிட்டாலும் இதரர்களின் உதவியைப்பெற்று ஆஸ்திக்ய விரோதிகள் வெகு ஸுலபமாக அதிகாரத்திற்கு வரக்கூடும். அப்படி நேர்ந்துவிடப் போகிறதேயென்று ஸாதுக்கள் நடுங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

யதேச்சாதிகாரிகளின் ஆளுகைக்குட்பட்ட ஸாதுக்கள் அவ்வதிகாரத்தை எதிர்த்துச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. தர்மவிருத்தமான மார்க்கத்தில் செல்லவேண்டாமென்று ஸாதுக்கள் எவ்வளவு உபதேசித்தாலும் யதேச்சாதிகாரச் செருக்குள்ளவர்கள் செவிசாய்க்கமாட்டார்கள். ஸர்வேச்வரனே அவர்கள் புத்தியில் தோன்றச்செய்து அவர்களாகத் தற்செயலாய் பாபமார்க்கத்திலிருந்து திரும்பினால்தான் உண்டு. (மணக்கோலத்திலிருக்கும் தேவகியைக் கொல்லவேண்டாமென்று கம்ஸனை வஸுதேவர் எவ்வளவோ வேண்டினார். அந்தப் ப்ரார்த்தனைக்குக் கம்ஸன் இணங்கவில்லை. விதிவசத்தால் அவனுக்கே கொல்லவேண்டாமென்று தோன்றியதால்தான் கொல்லாமல் விட்டான். 'ஸஹிவ்ருத்தஃ ஸ்வயம் வ்ருஹூஃ' என்று காட்டினார் மஹர்ஷி. இதே ரீதியில்தான் யதேச்சாதிகார ஆட்சிமுறையிலும் நடக்கும்.)

ப்ராசீன தர்மமார்க்கத்தைச் சிதைப்பதற்காக இயற்றப்படும் சட்டதிட்டங்களால் இம்மையில் யாருக்கும் எவ்வித ஆநுகூல்யமும் கிடையாது. ஜனங்களின் பாரலௌகிகமான (மறுமை) ச்ரேயஸ் பாதிக்கப்படுவதைத் தவிர

வேறில்லை. எனவே யதேச்சாதிகாரப்பித்தர்கள் அதிகாரத்துக்கு வாராமலிருக்கவேண்டுமென்றும், துரதிர்ஷ்டவசமாக அப்படிப்பட்டவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் அவர்களுக்கு நம் ப்ராசீந தர்மமார்க்கத்தைச் சிதைக்கும் வழிகளில் புத்தி பிரவேசம் ஏற்படாமலிருக்கவேண்டுமென்றும் ஸங்கல்பிக்கும்படி ஸர்வசரண்யனைப் பிரார்த்திப்பதொன்றுதான் ஸாதுஜனங்கள் செய்யக்கூடியது. இக்காலஸ்திதியில் அதுவே அவர்கள் கடமையுமாகிறது. அவர்களுடைய ப்ரார்த்தனையை சரண்யன் ஸபலமாக்குவான் என்றே நாம் தேறுதலடைய வேண்டியிருக்கிறது.

———

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸதுபதேசம்

(10–வது ஸம்புடம் 8–வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான்,
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

சிஷ்யன்— ஸ்வாமிந்! பகவானுக்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம்? எதற்காக இத்தனை விதமான அவதாரங்களை பண்ணியாவது ஜீவாத்மாக்களைக் காப்பாற்ற முயற்சி செய்கிறான்?

ஆசார்யன்— சொல்லிகிறேன் கவனித்துக்கேட்டு மனத்தில் வைத்துக்கொள். நல்ல ஸமயங்களில் உபயோகப்படும். பகவான் ஜீவாத்மாக்களுக்கு ஸ்வாமீ. ஜீவாத்மாக்கள் தாஸர்கள்; பகவான் தாய் தந்தை; ஆத்மாக்கள் புத்ரர்கள்; பகவான் மஹாராஜா; ஆத்மாக்கள் ப்ரஜைகள். பகவான் பர்த்தா. ஜீவர்கள் பத்நிகள் பகவான் ஆசார்யன். ஜீவர்கள் சிஷ்யர்கள். பகவான் எல்லோருக்கும் உயிர். ஜீவர்கள் எல்லோரும் அவனுக்கு உடல்கள்.

பகவான் பரமமித்ரன். அவன் ப்ரீதிக்கு ஜீவர்கள் பாத்ரர்கள். அவன் உடையவன். ஜீவர்கள் சொத்துக்கள். இதைப்போல் இன்னுமெத்தனைவிதமான ஸம்பந்தம் சொல்லமுடியுமோ அவ்வளவும் உண்டு பகவானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும். ஆகையால் எந்தவிதத்தாலும் ஜீவாத்மாக்களைக் காப்பாற்றகடமைப்பட்டவன் பகவான். இந்த உறவுகள் கீதை, விஷ்ணுபுராணம், ராமாயணம், ப்ரபந்தம், வேதம் முதலிய எல்லா க்ரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சிஷ்— பகவான் எப்பொழுது எந்த இடத்தில் ஸ்திரமாக இருப்பார்?

ஆசா— வைகுண்டம் என்கிற லோகத்தில் பகவான் எப்பொழுதும் லக்ஷ்மீஸமேதனாய் ஆதிசேஷதல்பத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்திக்கொண்டிருக்கிறார்.

சிஷ்— ஒரு ஸந்தேஹம் கோபித்துக்கொள்ளக்கூடாது. வைகுண்டத்தில் எப்போதும் இருப்பார் என்றால் சிலயிடத்தில் சிலஸமயத்தில் இருக்கமாட்டார்போல் தோன்றுகிறதே.

ஆசா— ஆம். முட்டாளுக்கு அப்படித் தோன்றும். முன் பின் சொல்லியிருப்பதை மறந்துவிட்டால் கேட்டுக்கொண்டே யிருக்கலாம். ஜீவாத்மாக்கள் சரீரத்தோடு இருப்பதுபோல் பகவானும் தன்னிஷ்டப்படி சரீரம் எடுத்துக்கொள்ளுவான் என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அந்தமாதிரி மிகவும் அழகான திருமேனியோடு எப்பொழுதும் வைகுண்டத்திலிருக்கிறான். அழகான திருமேனியோடு அவதரிக்கிறான் என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அப்படி அவதரிக்கிற திருமேனியோடு சிலசில யிடங்களில் சிலசில காலங்களில்தான் இருப்பான் திருமேனியை விட்டு. தனியாக இருப்பதைப்பற்றி யோசித்துப்பார். உள்ளேயிருக்கிற பகவான் எல்லாவிடங்களிலும் எப்

பொழுதும் ஆச்சர்யமான குணங்களோடு நிறைந்து இருக்கிறான். அதை ஸ்வரூபம் என்று சொல்லுவார்கள். அவன் எடுத்துக்கொள்ளும் உடலை திவ்யமங்களவிக்ரஹம் என்று சொல்லுவார்கள்.

சிஷ் — அந்த பகவான் என்ன ஜாதி?

ஆசா — அவர் எந்த ஜாதியிலும் சேர்ந்தவரல்ல. அவர் இருக்கிற வைகுண்டலோகத்தில் எப்போதும் உள்ளவர்களுக்கும் போய்ச் சேர்ந்தவர்களுக்குங்கூட எந்த ஜாதியும் கிடையாது. அவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த லோகங்களில்தான் ஜாதி மதம் என்கிற வேற்றுமைகள் எல்லாம்.

சிஷ் — அவர் எந்த ஜாதியிலும் சேர்ந்தவர் அல்லவென்றால் அவரிடத்தில் எல்லோரும் கிட்டப்போய் நின்று திருவடியை தொட்டு வணங்கி ப்ரார்த்தித்து எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளலாமல்லவா?

ஆசா — நீ எதற்காக இந்த அடி போடுகிறாய் என்று எனக்குத் தெரியும். ஏமாந்து பதில் சொல்லிவிடமாட்டேன். ஶாஸ்திரஸம்மதமான பதிலை சொல்லுகிறேன் கேள். பகவான் பூமண்டலத்தில் அவதரிக்கும்போது எந்தெந்த குலத்தில் அவதரிக்கிறாரோ அந்தந்த இடத்திற்கு உள்ள ஜாதியாகத் தான் இருந்துகொண்டு அதற்குத்தகுந்த ஆசாரத்தோடும் அநுஷ்டானத்தோடும் நடந்துக்கொண்டு வருகிறார். கீதையில் இதை சொல்லுகிறார் 'நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி' (எனக்கு அடையவேண்டுவது ஒன்றுமில்லை. இருந்தபோதிலும் நான் பிறந்த குலத்துக்குத்தகுந்த கர்மாநுஷ்டாநம் செய்துகொண்டு வருகிறேன்) என்று. ஆகையால் அவதரிக்கும்போது வர்ணாச்ரமதர்மங்களை மீறி நடக்கிறவர் இல்லை. இதை மனத்தில் வைத்துக்கொள். அர்ச்சாவதாரம் என்று ஒரு அவதாரம் செய்கிறான். அது எப்படி என்றால் யார்யார் எந்தெந்த ஜாதியார் எந்தெந்த ரூபமாக விக்ரஹங்கள் செய்துவைத்து பிரார்த்தித்தாலும் அந்தந்த விக்ரஹங்களுக்குள் அந்த விக்ரஹத்தைப்போல் ஒரு சரீரம் எடுத்துக்கொண்டு [illegible] இருந்து அவரவர்களுக்கு வேண்டிய அநுக்ரஹங்களைச் செய்கிறான்.

சிஷ் - ஸ்வாமிந்! நாம் ஒரு ராமவிக்ரஹத்தைப்பண்ணி அதற்குள் வரவேண்டும் என்றால் வந்துவிடுவானா?

ஆசா — அந்தந்த ஜாதிக்காரர்களுக்கு ஏற்பட்ட அந்த பகவானுடைய மந்திரங்களை அதனால் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து விச்வாஸத்தோடு பிரார்த்தித்தால்தான் அவரவர்கள் தங்களிஷ்டம்போல் செய்துவைத்துக்கொண்ட விக்ரஹங்களில் ஸாந்நித்யம்பண்ணி அதாவது- இருந்து ரக்ஷிப்பான். தெரிந்ததா? ஆகையால் முன் அவதாரத்திற்குத் தகுந்தது போல் ஜாதி கொண்டாடுகிறார் என்று சொன்னேனே அதைப்போல் எந்தெந்த ஜாதியாரால் விக்ரஹம் ஏற்படுத்தி ப்ரதிஷ்டை செய்துகொள்ளப்படுகிறதோ அதற்குத் தகுந்ததுபோல ஆசாரவ்யவஹாரங்கள் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டு இருக்கிறபடியால் எல்லோரும் விக்ரஹங்களை தொட்டுவிடுவது, எல்லோரும் கிட்டேபோய்விடுவதும் செய்யக்கூடாது. தொடக்கூடாததாயும் கிட்டே போகக்கூடாததாகவும் உள்ள எந்த வஸ்துக்களுடைய ஸம்பந்தமும் நாம் செய்துவைத்த அந்த விக்ரஹங்களுக்கோ அல்லது அந்த விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்துவைத்து இருக்கும் இடங்களுக்கோ ஏற்பட்டாலும் எந்த ஜாதி மதஸ்தர்களுக்கும் அவைகள் உபயோகப்படமாட்டா. அந்த விக்ரஹத்திற்குள்ளே ஒரு ரூபத்தோடு இருக்கிற பகவானுக்கு எந்ததோஷமுமில்லை. நாம் செய்துவைக்கிற தங்கம் வெள்ளி தாம்ப்ரம் முதலான விக்ரஹங்களுக்கு ஶாஸ்த்ரத்தால் சொல்லப்பட்ட தோஷமுள்ளவஸ்துக்கள் ஸம்பந்தம் ஏற்பட்டால் அந்தவிக்ரஹத்துக்குள் வந்தவரும் சிலவிடத்தில் போய்விடுகிறார். சிலவிடத்தில் இருந்து உபயோகமில்லாமல் இருக்கிறார் என்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். ஆகையால் கோயிலுக்குள் இருக்கிற விக்ரஹங்களை எல்லோரும் தொடக்கூடாது. பஹிஷ்டாஸ்த்ரீ முதலிய தீட்டுக்காரர்கள் உள்ளேயே போகக்கூடாது. போனால் அவர்களுக்கும் பாபம்; கோவிலும் அசுத்தமாகிவிடுகிறது. (தொடரும்)

199527

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தா வரவு 1951 ஸூ செப்டம்பர் மீ

சந்தாஎண்	பெயரும் விலாஸமும்		தொகை ரூ
101	ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸாசார்யர், மாம்பலம்.	51	3
170	,, T. தோதாத்ரிஐயங்கார், தெப்பக்குளம், திருச்சி.	,,	3
179	,, K. R ராமஸ்வாமிஐயங்கார், திருவல்லிக்கேணி.	,,	3
194	,, A. B. குப்புஸ்வாமிஐயங்கார், ஆவியூர்.	,,	3
197	,, K. S. ஸ்ரீநிவாஸாசார்யர், பம்பாய்.	50–55	18
276	,, V. சக்ரவர்த்தி ஆசார்யா, ஸ்ரீரங்கம்.	51	3
294	,, T. ஸ்ரீநிவாஸாசார்யர், சைதாப்பேட்டை.	,,	3
306	,, K. R. ராமானுஜம், பார்க்டவுன், மதராஸ்.	,,	3
383	,, R. ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை	,,	3
494	,, சேஷஐயங்கார், பொன்மலை.	,,	3
515	,, V. S. ஸ்ரீநிவாஸஐயங்கார், திருச்சினுப்பள்ளி.	50–51	6
585	,, K. S. சேஷஐயங்கார், காட்டம்பட்டி.	47–52	18
664	,, S. R. ஸுந்தரவரதாசார்யர், ஸ்ரீமுஷ்ணம்.	51	3
785	,, ராவ்பஹதூர், C. V. விஜயராகவாசார்யர், பம்பாய்.	,,	3
795	,, T. துரைஸாமி ஐயங்கார், ஒலக்கூர்.	,,	½
848	,, W. ராஜாராம்நாயுடு, ஆலந்தூர்.	50	3
875	,, P. R. ஸுந்தர ராஜன், பம்பாய்.	51	3
897	,, S. துரைஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	,,	3
1030	,, K. S. ஸ்ரீநிவாஸாசார்யர், பம்பாய்.	,,	3
1053	,, p. ரங்கஸ்வாமிஐயங்கார், புரசவாக்கம்.	,,	3
1086	,, A. வீரராகவாசார்யர், ஸ்ரீரங்கம்.	,,	2
1151	,, A. M. ஸுந்தரராஜன், சென்னை.	,,	3
1154	,, கிருஷ்ணஸ்வாமிஐயங்கார், டி. நகர், மதராஸ்.	,,	3
1155	,, K, ராஜகோபால், மாதுங்கா, பம்பாய்.	,,	3

மொத்தம் ரூ— 101½

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

மணியார்டர் பாரத்தில் கூபனின் பின்புறத்தில் பணம் அனுப்புவோரின் விலாஸத்தை எழுத இடம் விடப்பட்டிருக்கிறது. ஆயினும் பல சந்தாதாரர்கள் அதில் தங்கள் விலாஸத்தை எழுதுவதில்லை. இதனால் பணம் அனுப்பியது யாரென்று தெரிந்துகொள்ளமுடியாமல் போகிறது. கூபனின் பின்புறத்தில் ஸரியான முறையில் முழுவிலாஸத்தையும் எழுதினால் எங்களிடமுள்ள விலாஸத்தையும் அதன்படி திருத்திக்கொள்ள ஸௌகரியமுண்டு. மணியார்டர் பாரத்தின் முன்புறத்தில் விலாஸம் எழுதப்பெற்ற பாகம் தபாலாபீஸுக்கே போய்விடுவதால் கூபனின் பின்புறத்தில் விலாஸத்தை எழுதவேண்டியது மிக அவசியம். ஆகையால் சந்தாதாரர்கள் மறவாமல் கூபனில் தங்கள் சந்தா நம்பரையும் அதன் பின்புறத்தில் தங்கள் முழுவிலாஸத்தையும் எழுதியனுப்பவேண்டுமெனக் கோருகிறோம்.

மானேஜர்

Regd. No. M. 4437.

142.
MADRAS

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:—

மானேஜர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
45, கல்விவாரு தெரு,
மயிலாப்பூர்-சென்னை-4.

The Manager,
Sri Nrisimhapriya,
45, Calvivaru Street,
Mylapore. Madras-4.

இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும். சந்தாதார்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலேகண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஸ்வரம்.

The Editor,
Sri Nrisimha priya,
Malolalayam,
Tirunagesvaram.

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2. Audiappa mudali Street, Vepery, Madras, 7.